பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

●

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

●

கிளைகள் :

பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜெண்டுகள் :

எ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை etc.


உங்கள் பற்களின்
உள்ளும்,
வெளியும்,
இடையேயும்,
துலக்குகிறது
நீர் கடக்காது
நனைவுமேற்காது
விஷக் கிருமிகளகற்றப்
பட்ட கிலாஸ் ட்யூபுகளில்
பாக் செய்யப்பட்டது
ஒரு வருட உத்தரவாதம்
....அதற்கதிகம் நிற்கிறது
பற்களைத் துலக்கி, வெ
ண்மையாக்குவதில் 60%
அதிக பயனளிக்க வல்லது
இப்பொழுது
ஸ்டோர்களில்—
Dr. West's
TOOTH
PASTE
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
மிருகங்களின்
மயிரே
கிடையாது!
விவரங்களுக்கு :
(இந்தியா) லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா
கராச்சி — மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
Copyright
JWT (B) LTD.

L. D. 6288

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 2 — 1946 ஆகஸ்டு 11 — வியய ஆடி 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

நானூறு வருஷத்துக்கு முன்னால் அப்போது பாரத நாட்டுக்கு அன்னியர்களாயிருந்த மொகலாயர்களிடமிருந்து தேசத்தை விடுதலை செய்யும் பொருட்டு வீர ராஜபுத்திர சாதியார் ஒரு பெரும் போர் நடத்தினார்கள். அந்தப் போரில் இராஜபுத்திர முதுபெரும் மெய்வீரான ராணா ஸங்கிராம் சிங் சுதந்திரப் படைகளுக்குத் தலைமை வகித்தார். சுதந்திர சைன்யத்துக்கு வெற்றி கிடைக்கவில்லை. எனினும், அந்தப் போரில் ராணா ஸங்கிராம் சிங் தேகமெல்லாம் மொத்தம் 80 காயங்கள் அடைந்து காலஞ் சென்றார் என்பதை இன்றைக்கும் வீர இராஜபுத்திர தேசம் கதையிலும் கவிதையிலும் புகழ்ந்து பாராட்டுகிறது.



ராணா ஸங்கிராம் சிங்கைப் போலவே பிருதிவிராஜன், புருஷோத்தமன், ராணா பிரதாபசிங், நானாசாஹிப் முதலிய சுதந்திர மகா வீரர்கள் எத்தனையோ பேர் இந்தப் புண்ணிய பாரத பூமியில் தோன்றியிருக்கிறார்கள். அந்த வீர பரம்பரையில் வந்த மகா வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆவர்.

இராமர் பெயரும், அர்ச்சுனன் பெயரும், சந்திரகுப்தன் பெயரும், ஹர்ஷவர்த்தனன் பெயரும், அக்பரின் பெயரும், சிவாஜியின் பெயரும் உள்ளவரையில் இந்தப் புனித பூமியில் சுபாஷ் பாபுவின் பெயரும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அத்தகைய வீர நேதாஜியின் நினைவைச் சென்ற மாதத்தில் தமிழ்நாடெங்கும் தமிழ் மக்கள் குதூகலமாகக் கொண்டாடியது பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 2

என்ன சேதி?

சம்பளமும் மரியாதையும்

கல்வி மந்திரி சமீபத்தில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் ஒரு அருமையான உண்மையை வெளியிட்டதாகப் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. "இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் உபாத்தியாயர்களின் சம்பளம் குறைவாயிருந்த காலத்தில் அவர்களுக்கு மரியாதை அதிகமாயிருந்தது; இப்போது சம்பளம் அதிகமான பிறகு மரியாதை குறைந்து போய் விட்டது" என்றாராம். இந்த உண்மை முக்கியமாக நமது மந்திரிகளின் விஷயத்தில் மிகப் பொருத்தமாயிருக்கிறது. சென்ற காங்கிரஸ் ஆட்சியில் மந்திரிகளின் சம்பளம் குறைவாக இருந்தபோது அவர்களுக்கு மரியாதை அதிகமாயிருந்தது. இப்போது சம்பளம் இரட்டிப்பு ஆன பிறகு மரியாதை மிகக் குறைந்து போயிருக்கிறது. ஏழை உபாத்தியாயர்கள் "மந்திரிகளே! நீங்கள் மட்டும் சம்பளத்தை உயர்த்திக் கொண்டீர்களே? எங்களுக்கு ஒன்றுமில்லையா?" என்று கேட்பதும், சர்க்கார் குமாஸ்தாக்கள் "நாங்கள் பட்டினி கிடக்கிறோம்; **மந்திரிகள் தூங்குகிறார்கள்!**" என்று பெரிய கொட்டை எழுத்தில் எழுதிக் கொடி பிடிப்பதும் மந்திரிகளிடம் ஜனங்களுக்குள்ள மரியாதைக்கு அறிகுறிகளல்ல. எனவே மந்திரிகள் தங்களுடைய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உடனே தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

மானமும் வயிற்றுப் பசியும்

ஆனால் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் விஷயத்தில் மேற்படி உபதேசம் கொஞ்சமும் பொருத்தமில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம். "மானங் குலங் கல்வி வண்மை அறிவுடைமை முதலியன பத்தும் பசி வந்திடப் பறந்து போம்" என்று ஔவை மூதாட்டியே சொல்லியிருக்கிறார். ஏழை உபாத்தியாயர்கள் வயிற்றுப் பசியை முன்னிட்டே சம்பள உயர்வு கேட்கிறார்கள். எனவே, அவர்களிடம் மரியாதையைப் பற்றிப் பேசுவதில் அதிக பயனில்லையல்லவா?

பிரதம மந்திரி தம்மைப் பேட்டி காண வந்த ஆசிரியர்களிடம் அவ்வளவு மரியாதையாக நடந்து கொள்ளவில்லைதான். அப்படியிருந்தும் இன்னமும் ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்கத்தானே செய்கிறார்கள்? பசிக் கொடுமைக்கு முன்னால் மானமும் மரியாதையும் எம்மாத்திரம்?

ஆனால் மந்திரிகள் விஷயத்தில் பசிக் கொடுமையைக் காரணமாகச் சொல்ல முடியாதாகையால் சம்பளம் குறைத்துக் கொள்ளும் காரியத்தை அவர்கள் உடனே செய்து மரியாதையைப் பெருக்கிக் கொள்ளலாம்.

இரண்டு ரூபாய் உயர்வு

பிரதம மந்திரி நேரில் உபாத்தியாயர்களுக்குச் செய்த மரியாதையைக் காட்டிலும் கல்வி மந்திரி தமது வரவு செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு அதிக மரியாதை செய்திருக்கிறார். சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப் பாடசாலைகளில் தற்போது 14 ரூபாய் சம்பளம் வாங்கும் எலிமெண்டரி ஆசிரியர்களுக்கும் 16 ரூபாய் சம்பளம் வாங்கும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் மாதம் இரண்டு ரூபாய் வீதம் கிராண்டில் அதிகம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்! இரண்டு ரூபாய்

என்றால் நேயர்கள் ஏதோ அற்ப சொற்பம் என்று நினைத்து விடாதீர்கள். இரண்டு ரூபாய்க்கு 32 அணா: 384 தம்பிடி. இந்த நாளில் மலை வாழைப்பழத்தின் விலை உங்களுக்குத் தெரியுமா? டஜன் விலை அணா பன்னிரண்டு! ஆகவே, இரண்டு ரூபாய்க்கு மலை வாழைப்பழம் வாங்கினால் 30 தேதியுள்ள மாதங்களில் ஆசிரியருக்கு தினம் 1-1/15 வாழைப்பழமும் 31 தேதியுள்ள மாதங்களில் தினம் 1-1/31 பழமும் கிடைக்கும்! "அழுத பிள்ளைக்கு வாழைப் பழம்" என்பார்களே, அதுபோல 'வயிற்றுப் பசி' என்று மூக்கால் அழுத உபாத்தியாயர்களுக்கு தினம் ஒரு வாழைப் பழமும் சொச்சமும் நமது கருணையுள்ள காங்கிரஸ் சர்க்கார் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள்!

சார்ஜெண்ட் திட்டம்

ஆனால் சில வருஷங்களுக்கு முன்பு அதிகார வர்க்க இந்தியா கவர்ன்மெண்டார் ஸார்ஜெண்ட் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் கல்விச் சீர்திருத்தத்துக்காக யோசனை சொல்லும்படி நியமித்த கமிட்டியார் கொஞ்சம் மாறான யோசனைகளைச் சொன்னார்கள். அதாவது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் எவருக்கும் மாதம் முப்பது ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள்! ஸெகண்டரி கிரேட் உபாத்தியாயர்களுக்கு 40 ரூபாயில் சம்பளம் ஆரம்பிக்க வேண்டும் என்றார்கள். அவர்கள் திட்டம் போட்ட காலத்தில் அகவிலை மிகக் குறைவாயிருந்தது. "ஒரு வேளை விலைவாசிகள் அதிகமானால் மேற்படி சம்பளத் திட்டத்தில் 100-க்கு 50 வீதம் சம்பளம் அதிகமாக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அதன்படி எலிமெண்டரி கிரேட் உபாத்தியாயர்களுக்கு ஆரம்பச் சம்பளம் 45 ரூபாயும், ஸெகண்டரி கிரேட் உபாத்தியாயர்களுக்கு ஆரம்பச் சம்பளம் 60 ரூபாயும் ஆகிறது. மேற்படி சார்ஜெண்ட் கமிஷன் போட்ட குறைந்த பட்சமான சம்பளத் திட்டத்தின் அளவு கூட இப்போது நமது உபாத்தியாயர்கள் கேட்கவில்லை. அதற்கும் குறைவான சம்பளந்தான் கேட்கிறார்கள்.

கேட்பது சொற்பம்

கோயமுத்தூர் - நீலகிரி ஜில்லா உபாத்தியாயர் சங்கத்தார் சட்ட சபை அங்கத்தினர்களுக்கு ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கிறார்கள். அதில் விலை நிறுத்த ஜுரம் நாட்டில் வேகமாய்ப் பரவி வருவதைச் சுட்டிக் காட்டியிருப்பதுடன், உபாத்தியாயர்களின் குறைந்த பட்சமான சம்பளக் கோரிக்கைகளையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வருஷா வருஷம் சம்பள உயர்வு இவ்வளவு வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை வருமாறு:—

1. எலிமெண்டரி கிரேட்	ரூ.	40	2	70
2. ஸெகண்டரி கிரேட்	ரூ.	50	2	80
3. இண்டர்மீடியட்	ரூ.	60	2	90
4. எல். டி., பி.டி.க்கள்	ரூ.	100	5	175
5. ஹெட்மாஸ்டர்கள்	ரூ.	175	10	275

பொறுப்பை உணர்ந்து, பொதுப் பணத்தின் அருமையையும் தெரிந்து மிகவும் தர்ம நியாயமான கோரிக்கைகளை மேற்படி சம்பளத் திட்டத்தில் கோவை - நீலகிரி உபாத்தியாயர்கள் வெளியிட்டிருக்கின்றனர். மேற்படி திட்டத்தை நாகரிகமுள்ள எந்த சர்க்காரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ளவில்லையென்றால், அவர்கள் கற்ற கல்வியெல்லாம் வீண் என்றுதான் கருதப்படும்.

○ ✶ ○

★ ★ ★ ★ ★ ★ ★ தற்கால ஹாஸ்யம் ★ ★ ★ ★ ★ ★ ★

தற்காலத்து உலக அரசியல், இந்திய அரசியல் நிகழ்ச்சிகளையும் தற்கால சமூக வாழ்க்கை நிலைமையையும் ஆதாரமாகக் கொண்ட ஹாஸ்யத் துணுக்குகள் நேயர்களுக்குத் தோன்றினால் உடனே கல்கிக்கு எழுதி அனுப்பவும். பிரசுரமாகும் அத்தகைய ஒவ்வொரு ஹாஸ்யத் துணுக்குக்கும் குறைந்தபட்சம் ஐந்து ரூபாயும் ஆசிரியர் உசிதப்படி அதற்கு மேலும் சன்மானம் அளிக்கப்படும்.


பழைய மாமூல் காலக்ஷேபப் பரிசுத் திட்டத்தைத் தவிர இந்தப் பரிசு பிரத்யேகமாகக் கொடுக்கப்படுகிறது.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: என். குருசாமி, 18, நாதமுனித் தெரு, தியாகராய நகர், சென்னை.

அபயப் பிரதானமும்......



ரொம்ப வந்தனம்! மூன்று வருஷத்துக்கு உயிர் கொடுத்தால் அப்புறம் நானே பார்த்துக் கொள்கிறேன்!
பயப்பட வேண்டாம்! மூன்று வருஷத்துக்கு உனக்கு அபயப் பிரதானம் தருகிறேன்!
கூடாது! கூடாது!
ரூபாய் 13 கோடி
பிரதம மந்திரி
குடியரசு


இப்படி ஏமாற்றலாமா? இது என்ன நியாயம்?
சபாஷ்! ரொம்ப சரி!
ஐயோ! என்னால் முடியாது! அபயம்

வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்!!

சென்னை மாகாணத்துப் பொது மக்களை வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்! சென்னை மாகாணத்துப் பொது ஜனங்களின் பிரதிநிதிகளை மகிழ்ந்து பாராட்டுகிறோம்!

சென்னை மாகாணத்துப் பொது ஜனங்களுக்கும் பொது ஜனப் பிரதிநிதிகளுக்கும் சென்ற வாரத்தில் ஒரு மகத்தான வெற்றி கிடைத்தது.

அந்த வெற்றி மிகவும் முக்கியமான ஒரு தார்மிக காரியத்திலே — அதாவது மதுவிலக்குத் துறையிலே—கிடைத்தது.

* * *

பிரகாசம் சர்க்கார் தயாரித்திருந்த வரவு செலவுத் திட்டத்தில் நாலு ஜில்லாக்களில் மதுவிலக்குச் செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வரவு செலவுத் திட்டம் வெளியாவதற்குச் சில நாளைக்கு முன்னமேயே மேற்படி சமாசாரம் வெளியாகி விட்டது. அதைப் பற்றிய சர்க்கார் உத்தரவு ஒன்றும் பிரசுரமாயிற்று. '' மதுவிலக்கு ஒரேயடியாக முடியாது; கொஞ்சங் கொஞ்சமாகத்தான் முடியும் '' என்ற பல்லவியை — அபஸ்வரம் நிறைந்த அபத்தப் பல்லவியை — மந்திரிகள் போகுமிடமெல்லாம் பாட ஆரம்பித்தார்கள்!

இதற்கு மாருக, '' நாலு ஜில்லாக்களில் மதுவிலக்குப் போதாது; மாகாணம் முழுவதிலும் செய்ய வேண்டும் '' என்ற பொதுஜனப் பெருங் கிளர்ச்சி நாடெங்கும் எழுந்தது. ராஜாஜி அந்தப் பேரெழுச்சியின் கூர் முனையாக விளங்கினர். அவருடைய கோகலே மண்டபப் பிரசங்கம் மக்களுக்கு மது விலக்கு ஆவேசத்தையே உண்டாக்கி மந்திரிகளையும் கலக்கிவிட்டது.

ஒரே ஒரு பிரசங்கமானது ஓர் அரசாங்கத்தின் முடிவான தீர்மானத்தை மூன்றே நாளில் மாற்றி விட்டது என்ருல், அதற்கு உதாரணமாக மேற்படி ராஜாஜி பிரசங்கத்தைத்தான் சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் மேற்படி கிளர்ச்சிக்குத் துணை நின்றது மகிழ்ச்சியுடன் பாராட்ட வேண்டியதாகும்.

ஆனாலும் பிரகாசம்காரு தமது பெயர் போன பிடிவாத வித்தையை ஆரம்பத்தில் காட்டினர். ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் கொண்டு வந்த தீர்மானத்தைக் கட்சிக் கூட்டத்தில் நியாய மற்ற காரணத்தைச் சொல்லி நிராகரித்தார். '' நாலு ஜில்லா மதுவிலக்குத்தான் மந்திரி சபையின் கொள்கை; அதை மாற்ற முடியாது; அதை மாற்ற வேண்டுமென்று சொல்வதே கட்சிக் கட்டுப்பாட்டுக்கு விரோதம் '' என்ருர்.

ஆனல் இது விஷயமான பொதுஜன உணர்ச்சியைச் சட்ட சபையின் காங்கிரஸ் அங்கத்தினர் அறிந்திருந்தார்கள். எனவே, '' நாலு ஜில்லாவில் மதுவிலக்குப் போதாது; மாகாணம் முழுவதிலும் மதுவிலக்கு வேண்டும் '' என்ற மகஜரில் 100 பேருக்கு மேல் கையொப்பமிட்டுப் பிரதம மந்திரிக்கு அனுப்ப ஆயத்தம் செய்தார்கள்.

இதன் பேரில் பிரதம மந்திரி பிரகாசத்தின் பிடிவாதம் தளர்ந்தது. கட்சிக் கூட்டத்தில் அவருடைய பேச்சின் ஸ்வரம் மேல் பஞ்சமத்திலிருந்து கீழ் ஷட்ஜமத்துக்கு இறங்கிற்று!

மந்திரிகள் கூடிக் கூடிப் பேசி மூளையைக் குழப்பிக் கொண்டார்கள். கடைசியாக, நாலு ஜில்லாக்களுக்குப் பதில் எட்டு ஜில்லாக்களில் மதுவிலக்குச் செய்ய ஒப்புக் கொண்டார்கள்.

மது அரக்கன் தலையிலே ஒரு பெரிய இடி போன்ற அடி விழுந்தது!

பொதுஜன அபிப்பிராயத்துக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்தது.

புதிய மந்திரி சபை ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்தது.

* * *

மேற்கண்டவாறு காங்கிரஸ் மந்திரி சபை தப்பிப் பிழைத்ததில் நமது மகிழ்ச்சியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மதுவிலக்குக் கிளர்ச்சி செய்தவர்கள் பிரகாசம் மந்திரி சபையைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்பது எவ்வளவு அபத்தம் என்பதைச் சென்ற இதழிலேயே எடுத்துக் காட்டியிருந்தோம்.

அதை இன்னொரு முறை மறுபடியும் வற்புறுத்திச் சொல்கிறோம்.

காங்கிரஸ் மந்திரி சபைக்கு வீழ்ச்சி நேர்ந்ததானால், அது காங்கிரஸுக்கு அவமானமாகும் : நமது மாகாணத்துக்கும் பெரிய அவமானந்தான்.

இரண்டாந்தர மந்திரி சபையாயிருந்தாலும், அதைக் கொண்டு முதல்தர தேசியத் திட்டங்களை நடத்தி வைப்பது தான் காங்கிரஸுக்கும் கௌரவம்; நமது மாகாணத்துக்கும் கௌரவம்.

அந்த கௌரவத்தையே மதுவிலக்குக் கிளர்ச்சிக்காரர்கள் விரும்புகிறார்கள். கேவலம் மந்திரி பதவியை விரும்புகிறவர்கள் அவர்களில் யாரும் இல்லை.

கட்சிக் கூட்டத்தில் இது பற்றித் தீர்மானம் கொண்டுவந்த ஸ்ரீ எ. வைத்தியநாதய்யர், பிரதம மந்திரி பிரகாசம் காருவால் மந்திரி பதவி அளிக்கப்பட்டு அதை வேண்டாம் என்று மறுதளித்தவர்.

ராஜாஜியைப் பதவி மோகம் கொண்டவர் என்று இன்னமும் சிலர் சொல்கிறார்கள் என்றால், அது அவேஷத்தினால் மனதறிந்து சொல்லும் பொய்யே தவிர வேறில்லை.

அப்படி அவதூறு சொல்கிறவர்களின் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால், அதுவே மேற்படி பேச்சு வெறும் பொய் என்று சொல்லி விடும்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராயிருப்பதைக் காட்டிலும் பிரதம மந்திரி பதவி பெரியதன்று.

ராஜாஜி பூரண மதுவிலக்கு வேண்டுமென்று வற்புறுத்துவது இன்று, நேற்றுச் செய்தியல்ல; இருபது வருஷமாக அவர் செய்துவரும் மதுவிலக்குத் தொண்டை உலகமே அறியும். மதுவிலக்குச் செய்வதற்காக வென்று சொல்லியே அவர் விற்பனை வரி போட்டார். இப்போது ராஜாஜி வேண்டுவதெல்லாம், அவரால் விதிக்கப்பட்ட விற்பனை வரிப் பணம் அவர் பொது ஜனங்களுக்கு வாக்குக் கொடுத்திருந்த பிரகாரம் மதுவிலக்குக்கே உபயோகப் படவேண்டும் என்பதுதான்.

விற்பனை வரியைப் பிறர் வேறு விதமாய் துர் உபயோகப்படுத்தக் கூடும் என்ற எண்ணத்தினாலேயே ராஜாஜி எத்தனையோ அவதூறுகளுக்கிடையில் இந்த மாகாண அரசியலில் சிரத்தை எடுத்துக் கொண்டார்.

அவர் பயந்தபடியேதான் பிரகாசம் காரு முதலில் தயாரித்த வரவு செலவுத் திட்டமும் இருந்தது.

அதனாலேதான் ராஜாஜி மதுவிலக்குக் கிளர்ச்சிக்குத் தலைமை வகிக்க நேர்ந்தது.

நன்றாகத் தெரிந்த மேற்படி உண்மைகளையெல்லாம் எதற்காக மறுபடியும் சொல்கிறோம் என்றால், "மதுவிலக்குக் கிளர்ச்சி பதவி சம்பந்தமான சூழ்ச்சி" என்ற பொய் அவதூறு ஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் போன்ற பெரியவர்களையும் ஏமாற்றியிருக்கிறது என்று சென்ற வாரத்திலே வெளியானபடியினால்தான்.

* * *

கள்ளரக்கனுக்கு எங்கெங்கேயோ சிநேகிதர்கள் இருக்கிறார்கள் என்பது சென்ற வாரத்தில் திடீர் திடீரென்று வெளியாயிற்று.

தீவிர தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொண்ட சில பத்திரிகைகள் தங்களுடைய உண்மை சொரூபத்தை வெளிப்படுத்திக் கொண்டன. மதுவிலக்கை ஒத்திப் போடுவதற்கு அதிசயமான காரணங்களைக் கற்பித்து எழுதின.

பல தேசபக்த ஸ்ரீமான்களும், பல பிரபல கல்விமான்களும் கள்ளரக்கனிடம் தங்களுடைய அபார நட்பைத் தெரியப்படுத்திக் கொண்டார்கள்.

அப்படிக் கள்ளரக்கனுடைய நண்பர்களாக வெளி வந்தவர்களில் ஸ்ரீ வெங்கடராம சாஸ்திரியும் ஒருவரானார்.

மதுவிலக்கை "அற்ப விஷயம்" என்று அப்பெரியார் சொன்னார்.

நெற்றி வேர்வை நிலத்தில் விழ நாளெல்லாம் உழைக்கும் ஏழைத் தொழிலாளி தான் பெற்ற கூலியை அப்படியே கள்ளுக் கடையில் தொலைத்து விட்டு வீட்டுக்குப் போய்ப் பெண்டு பிள்ளைகளைப் பட்டினி போடுவதோடு அவர்களை அடித்து ஹிம்சிப்பது அற்ப விஷயம் என்று சொல்ல எப்படித்தான் சாஸ்திரியாருக்கு மனம் வந்ததோ தெரியவில்லை.

அத்தகைய ஏழை மக்களைக் குடிக்கப் பண்ணி அவர்களுடைய மதியைக் குழப்பிப் பணத்தைப் பிடுங்கி அப்படி வரும் பணத்தைக் கொண்டு அரசாங்கம் நடத்த வேண்டும் என்று சொல்ல எப்படித்தான் சாஸ்திரியார் துணிந்தாரோ தெரியவில்லை.

ஏழைகளுக்கு விஷத்தை விற்று அவர்களுடைய பெண்டு பிள்ளைகளின் வயிற்றில் அடிக்கும் சண்டாளச் செயலை நிறுத்துவது அற்ப காரியம் என்று சொல்லிவிட்டு, ஜில்லாவுக்கு ஜில்லா நாலைந்து புதிய மாஜிஸ்ட்ரேட்டுகளையும் அவர்களுக்குக் குமாஸ்தா சிப்பந்திகளையும் நியமிக்கும் காரியத்தை முக்கியமான விஷயம் என்று பிரமாதப்படுத்துவதில் சாஸ்திரியார் போன்றவர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், அது தேசத்தின் துரதிர்ஷ்டமே தவிர வேறில்லை.

இப்படிப்பட்ட கருத்தை உடையவர் சாஸ்திரியார் என்று தெரிந்த பிறகு, அவர் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப் படவில்லையே என்று நமக்கு ஏற்பட்டிருந்த வருத்தம் அடியோடு மாறிவிட்டது.

* * *

சீன்வாரக்கன் தலையின் ஒரு பெரிய அடி விழுந்திருப்பது உண்மைதான். அவனுடைய அருமை நண்பர்களுக்கெல்லாம் பெரும் ஏமாற்றம் என்பதும் உண்மைதான். ஆனால் பொது ஜனங்களும் மதுவிலக்குத் தொண்டர்களும் பூரண திருப்தி யடைவதற்கு இன்னும் காரணம் ஏற்படவில்லை. சென்னை மாகாணத்தின் இருபத்தாறு ஜில்லாக்களிலும் மதுவிலக்கு ஏற்படும்போது தான் அவர்கள் அவ்வாறு பூரண திருப்தி யடையலாம்.

பூரண மதுவிலக்கை இருபத்தாறு ஜில்லாக்களிலும் சேர்ந்தாற் போல் அமுலுக்குக் கொண்டுவர இந்த மாகாணத்துக்கு என்றுமில்லாத சௌகரியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. வேறு எந்த மாகாணத்துக்கும் இத்தகைய வசதி கிடையாது.

சென்ற வருஷத்திலே சென்னை மாகாணத்தின் வரவு 48 கோடி ரூபாய்க்குச் செலவு 30 கோடி ரூபாய்தான். எனவே, கலால் வருமானம் முழுதும் போனபிற்பாடும் சென்ற வருஷத்தைக் காட்டிலும் அதிக தொகை சர்க்காரின் செலவுக்கு இருக்கிறது. இதைத் தவிர, கையிருப்பு நிதி வேறு இருக்கிறது.

எனவே, மதுவிலக்குக்காகப் புதிய வரி போட வேண்டும் என்ற பேச்சை இப்போதிருந்தே மண்டையில் அடித்து வர வேண்டும்.

கதர்த் திட்டத்திற்குப் பணம் வேண்டுமானால் கதருக்காக வென்று புதிய வரி போடட்டும்.

வேறு நிர்மாண வேலைகளுக்குப் பணம் வேண்டுமானால் அந்தந்த வேலையைச் சொல்லி வரி விதிக்கட்டும்.

உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் உயர்த்தப் பணம் வேண்டுமானால், அந்தக் காரணத்தைச் சொல்லி வரியைப் போடட்டும்.

அதே மாதிரி நீர்ப்பாசனத்துக்கும், சுகாதாரத்துக்கும், கல்வி அபிவிருத்திக்கும் பணம் வேண்டுமானால் அந்தந்தத் திட்டத்தின் பேரால் புதிய வரியைப் போடட்டும்.

மதுவிலக்கின் பேரால் வரி போடுவதென்பது பெரிய மோசடி.

ஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரிக்கு முத்தண்ணாவாக மேல் சட்டசபையில் பேசியிருக்கும் வைஸ் சான்ஸலர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார், "ஜனங்களுக்குக் குடி தண்ணீர் வேண்டாமா? அதைக் காட்டிலும் மதுவிலக்கு அவசியமா?" என்று கேட்டிருக்கிறார்.

அற்புதமான கேள்வி! மதராஸ் யுனிவர்ஸிடியின் வைஸ் சான்ஸலரைத் தவிர வேறு யாராலும் கேட்க முடியாத அதிசயமான கேள்வி!

குடி தண்ணீர் வேண்டுமென்றால், அதற்கு ஏழை ஜனங்களைக் கள்ளு சாராயம் குடிக்கச் சொல்லி அவர்களுடைய ஆளையைக் கெடுத்துப் பணத்தைப் பறிப்பது ஒன்றுதானா வழி?

குடி தண்ணீருக்காக வென்று வரி போட்டு வசூலிக்கக் கூடாதா? டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார், ஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் போன்றவர்கள் கொடுக்கக் கூடாதா?

குடி தண்ணீருக்குக் குடிகாரர்கள் தான் பணம் கொடுக்க வேண்டுமென்று மதராஸ் யுனிவர்ஸிடி பாடபுத்தகங்களில் சொல்லியிருக்கிறதா? அல்லது மெடிகல் கௌன்ஸில் விதிகளில் எழுதியிருக்கிறதா?

இதையெல்லாம் மதுவிலக்குத் தொண்டர்கள் பொது ஜனங்களுக்கு ஓயாமல் எடுத்துச் சொல்லி வரவேண்டும். 1947-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் சென்னை மாகாணம் முழுவதிலும் மதுவிலக்குச் செய்தே யாரும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அவ்விதம் நடந்தால் சென்னை மாகாணமானது அகில இந்தியாவின் முன்னணியில் இழந்துவிட்ட கௌரவத்தை மீண்டும் அடையும். எல்லா மாகாணங்களுக்கும் முதன்மை ஸ்தானம் வகித்து வழிகாட்டும் பெருமையையும் மறுபடி அடையும்.

பஞ்சத்தை வளர்க்கிறார்கள்!

சென்னை மாகாண மந்திரிகளும் விவசாய இலாகாவும் சேர்ந்து இந்த மாகாணத்தில் பயிரை வளர்க்கவில்லை; — பஞ்சத்தை வளர்க்கிறார்கள் என்பது சென்ற வாரத்தில் டாக்டர் ராஜன் எம். எல். ஸி. மேல் சட்டசபையில் பேசிய பேச்சிலிருந்து திட்டமாய் வெளியாகிறது.

* * *

ரேஷன் முறை ஆரம்பித்த புதிதில் அட்வைஸரி சர்க்கார் தலைக்கு 16 அவுன்ஸ் அரிசி கொடுத்தார்கள். அதைப் பிறகு 12 அவுன்ஸ் ஆக்கினார்கள். காங்கிரஸ் மந்திரி சபை வந்த பிறகு அரிசி ரேஷன் பத்து அவுன்ஸாகக் குறைந்தது. இப்போது எட்டு அவுன்ஸ் ஆகியிருக்கிறது!

கோரைக்கால் ஆழ்வான் என்ற பிரபுவுக்கு ஒரு நாள் ஒரு தமிழ்ப் புலவரிடம் அபார அபிமானம் பிறந்தது. "உமக்கு ஒரு யானையைப் பரிசாக அளிக்கப் போகிறேன்" என்று சொன்னான். புலவர் பரிசைக் கேட்க வந்தபோது, "யானை என்னத்திற்கு உனக்கு? குதிரை தருகிறேன்; சவாரிக்கு உதவும்!" என்றான். பிறகு, "குதிரை உதைக்கும்; கறவை எருமை தருகிறேன்" என்றான். எருமை எருதாகிப் பிறகு முழுப் புடவை ஆயிற்று. அதுவும் கடைசியில் கந்தல் துணியாகப் புலவருக்குக் கிடைத்தது.

"கரியாய்ப் பரியாகிக்
காரெருமை தானாய்
எருதாய் முழுப்புடவை
யாகித் — திரித்திரியாய்த்
தேரைக்கால் பெற்றமிகத்
தேய்ந்து தேய்ந் தோய்ந்ததே
கோரைக்கால் ஆழ்வான்
கொடை!"

என்ற பாடல் மேற்படி கோரைக்கால் ஆழ்வான் கொடையை வர்ணிக்கிறது.

அரிசி ரேஷன் நாளுக்கு நாள் தேய்ந்து வருவது அவ்வளவு இலட்சணத்தான்!

* * *

இப்படி அரிசியைக் குறைத்து விட்டு, குறைந்த அரிசிக்குப் பதிலாகக் கோதுமை வாங்கிக் கொள்ளச் சொல்லுகிறார்கள். வேறு மாகாணத்தில் அதிக விலை கொடுத் வாங்கிய கோதுமையை இங்கே நஷ்டத்துக்கு விற்றுப் பொதுப் பணத்தை விரய செய்கிறார்கள். இதைப் பற்றிக் "கோ மைக் கொள்ளை" என்ற தலைப்பில் மு னமே எழுதி யிருக்கிறோம். அதை டாக்ட ராஜனும் வற்புறுத்தி யிருக்கிறார். இந் மாகாணத்தில் 100-க்கு 50 வீதம் அதி விலை கொடுத்துக் கோதுமை வாங்கப்ப கிறதென்பதைச் சுட்டிக் காட்டி யிருக்கிறா

அதோடு கோதுமைப் பிரசாரத்தி இலட்சணத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். ஏராளமான பொருட் செல பண்ணிக்கொண்டு மோட்டார் வண்டியி சென்று கிராமங்களில் கோதுமை மா நெய், உப்பு, புளி, மிளகாய் எல்லா வைத்துக்கொண்டு ரொட்டியும் தோசையும் செய்து காட்டியும் சாப்பிட்டுக் காட்டியு பிரசாரம் செய்கிறார்கள்!

அரிசியைக் கஞ்சியாகக் காய்ச்சி ஒ துளி உப்பைப் போட்டுக் குடித்துப் ப யாறும் ஏழைகளுக்கு மேற்படி பிரசார தினால் என்ன பிரயோஜனம்? அவர்க நெய்க்கு எங்கே போவார்கள்? — என் டாக்டர் ராஜன் கேட்கிறார்.

மேற்கண்டவாறு அரிசி ரேஷனை குறைப்பதற்கோ, கோதுமைப் பிரசார செய்வதற்கோ இன்றியமையாத அவசிய இருக்கிறதா என்று கேட்டால், "இல்லை" என்பது டாக்டர் ராஜனுடைய கட்சி அயல் நாட்டுக் கோதுமை தருவிப்பதி விரயமாக்கும் பணத்தை உள்நாட்டு நெ உற்பத்திக்குச் செலவழித்திருந்தால், அரி ரேஷனைக் குறைத்தே இருக்க வேண்டா என்று டாக்டர் ராஜன் வற்புறுத்தி சொல்வதோடு இது விஷயத்தில் சர்க்காரின் அசட்டைக்கு அத்தாட்சியும் தருகிறார்.

முசிரி தாலுகாவில் காலமில்லாத கால தில் நெல் சாகுபடி செய்து செப்டம்பரி 45,000 கலம் நெல் (தஞ்சாவூர்க் கல 90,000 கலம்) தருவதாக டாக்டர் ராஜன் முன் வந்து ஏற்றுக் கொண்டார். முசி தாலுகா முழுவதும் சுற்றுப் பிரயாண செய்து விவசாயிகளைச் சம்மதிக்கப் பண் ணினார். இதற்காக டாக்டர் ராஜன் சர்

ளிடம் கேட்ட உதவி, அப்படி அகாலத்தில்
ல் சாகுபடியாகும் ஒவ்வொரு ஏக்கர் நிலத்
க்கும் இரண்டு மூட்டை பிண்ணாக்கும்
ரை மூட்டை 'அம்மோனியம் ஸல்பேட்'
ன்னும் ரசாயன எருவும் இனமாகக்
காடுக்கவேண்டும் என்பதுதான்.

"அதெல்லாம் இனமாகக் கொடுக்க
டியாது. மார்க்கெட்டிலே வேண்டிய
ண்ணாக்குக் கிடைக்கிறது. விவசாயிகள்
லைக்கு வாங்கிக் கொள்ளட்டும்!" என்று
ர்க்கார் பதில் சொல்லி விட்டார்கள்.
தோடு விட்டார்களா?

அப்படிச் சொன்ன அடியோடு, பிண்ணாக்
க் கட்டுப்பாட்டு விதியை அமுலுக்குக்
காண்டுவந்தார்கள். அதாவது மாகாணத்தி
ள்ள பிண்ணாக்கெல்லாம் சர்க்கார் விவ
ாய இலாகாவினுல் கட்டாயமாய் வாங்கப்
ட்டது.

சொந்தப் பணம் கொடுத்துப் பிண்ணாக்கு
ாங்கும் வசதியுடைய விவசாயிகள், விவ
ாய இலாகா ஆபீஸைத் தேடிப்போனார்கள்.
யூ' வரிசையில் நின்று வெகுநேரம் காத்
ிருந்த பிறகு 'பிண்ணாக்கு இல்லை' என்ற
திலைக் கேட்டுக்கொண்டு அவர்களில் பலர்
ிரும்பிப் போக நேர்ந்தது.

வருஷா வருஷம் 30 டன் பிண்ணாக்கு
ரத்துக்காக வாங்கிக் கொண்டிருந்த
ாக்டர் ராஜனுக்கு 5 டன்தான் இந்த
வருஷம் கிடைத்தது. எனவே, தமது
நிலத்தில் பெரும் பகுதியை டாக்டர் ராஜன்
இந்தத் தடவை சாகுபடி செய்யாமல் தரிசு
போட வேண்டியிருக்கிறதாம்!

எப்படியிருக்கிறது கதை? எப்படியிருக்
கிறது விவசாய இலாகா விளைவைப்
பெருக்கும் இலட்சணம்? எப்படி இருக்
கிறது விவசாய மந்திரியின் அழகான
நிர்வாகம்?

எல்லாருமாகச் சேர்ந்து பயிரை வளர்ப்
பதற்குப் பதிலாகப் பஞ்சத்தை வளர்க்
கிறார்கள் என்று சொல்வது பிசகாகுமா?

டாக்டர் ராஜனுடைய குற்றச் சாட்டு
உண்மையா இல்லையா என்று மந்திரிகள்
சொல்லட்டும். அது உண்மையாயிருந்தால்,
செப்டம்பரில் 45,000 கலம் நெல் கிடைப்
பது தடைப்பட்டுப் போனதற்குத் தக்க
சமாதானம் சொல்லி அழட்டும்!

* * *

விவசாயிகளுக்கு உரம் இனமாக சப்ளை
செய்ய வேண்டும் என்னும் யோசனையை
ஏற்கனவே நாம் வற்புறுத்தியிருக்கிறோம்.
அவ்வாறு செய்து நமது நாட்டு நிலத்தை
வளப்படுத்திப் பயிர் உற்பத்தியை அதிக
மாக்காமல் அன்னிய நாட்டுத் தானியங்
களுக்குப் பணத்தைக் கொட்டிக் கொடுத்தல்
இந்த சர்க்கார் செய்யும் குற்றங்களிலே
பெருங் குற்றமாகும்.

கத்தான பிரஹ்ம யக்ஞம்

புண்ணிய பூமியாகிய பாரத கண்டத்தில்
கபர சாதனங்கள் இரண்டுக்கும் வழி
ட்டும் பரம ஞானிகள் பலர் இருந்தார்கள்.
வர்களில் பலர் விதியின் கோர தாண்டவங்
ான பசி, பிணி, அகால மரணம் முதலிய
டங்களிலிருந்தெல்லாம் மக்களைத் தப்பு
த்து நாட்டில் சுபிக்ஷத்தை நிலைநாட்ட
ண்டும் என்னும் நோக்கத்துடன் கடுந்
வம் புரிந்தனர்; மகத்தான யாகங்கள் செய்
னர்; மாபெருந் தியாகங்கள் செய்தனர்.

அந்தகைய மகான்கள் நம் நாட்டை விட்டு
டியோடு போய்விடவில்லை என்பதற்கு அறி
றியாக மதுரையம்பதியில் ஸ்ரீ கோவிந்த
ஸர் என்னும் மகான் ஒருவர் இருக்கிறார்.

சௌராஷ்டிர பிராம்மண சமூகத்தைச்
ர்ந்த பல பிரமுகர்களின் ஒத்துழைப்பைக்
காண்டு அப்பெரியார், ஜபம், ஹோமம், அபி
ஷகம், அர்ச்சனை, ஆராதனை முதலிய வைதிக
ிரியைகளுடன் "பிரஹ்ம யக்ஞம்" என்
ும் சிறந்த யக்ஞத்தை 12—8—46 திங்கட்
ிழமை யன்று நடத்தி வைக்கிறார். வைகைத்
தென்கரையில் நிகழவிருக்கும் இந்த மகத்
ான யக்ஞ கைங்கர்யத்துக்குப் பொருளுதவி
சய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்
க்கு அனுப்பிவைக்கவும் :— பொக்கிஷ
ர், கோவிந்ததாஸ ஸமாஜம், நெ. 25,
யூன் மால் 6-வது தெரு, மதுரை.



— ஸ்ரீ கோவிந்த தாஸர் —

ஓர் ஏழை உபாத்தியாயரின் மனைவி தன் தோழியிடம் சொல்கிறாள்:

கவலை தீருமா?

*

1. எழுத்தறி வித்தவன் இறைவனா குமென்று
 எவரோ ஒருவன் எழுதிவிட்டான்
 எழுத்தறி வித்திடும் ஏழை உபாத்தியார்
 இன்று படும்பாட்டைக் கேளடியோ!

2. கூலிவேலை செய்வோர், — ஆலைத் தொழிலாளர்
 குறைதீர 'ஸ்ட்ரைக்'குண்டு: உரிமையுண்டு
 கேலிப் பிழைப்பான வாத்தியார் வேலைக்கு
 கேள்வி முறை ஏதும் இல்லையடி!

3. மாடியில் நின்றாலும் மந்திரி யானாலும்
 மாணாக்க ராய்ப்பாடம் கற்றவரே!
 தேடி இப்போ சென்றால் பேட்டியும் கொடுக்காமல்
 சேவகரைக் கொண்டு தள்ளிடுவார்!

4. பட்டினி யால்வாடிப் பதறித் துடித்தாலும்
 பன்னிரண் டேரூபாய் சம்பளந்தான்!
 ஏட்டில் அரசாங்கம் எழுதிய சட்டமாம்
 ஈசன்தான் கண்கொண்டு பார்க்கவேணும்!

5. பஞ்சப் படிரூபாய் பதினாறும் இப்போது
 பண்டம் விலைவாசி கொஞ்சமோடி!
 வஞ்சனை யில்லாமல் வரம்ஏதும் கேட்காமல்
 அஞ்சுட னாறேழு குழந்தையடி!

6. டிப்டி அரைவந்தால் டர்பன்கோட் வேணுமாம்
 தேடுவார் ஓடுவார், பாவமடி!
 சட்டை ஒன்றுண்டு தலைமுறை யாய்அதை
 தைத்துச் சவுக்காரம் போட்டிடுவார்!

7. அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரில் அத்தனை பேருமே
 ஆஜரில் லாவிட்டால் மோசமடி
 சுற்றுவார் ஊரெல்லாம் சுந்தரம், சந்துரு,
 சுப்ப னையும்கெஞ்சிக் கூப்பிடுவார்!

8. அ(ஸ்)ஆஇஸ்குடன் அறஞ்செய விரும்பென்பார்
 அத்துடன் வாய்ப்பாடு கணக்குமுண்டு
 நாய்க்கதை பூவேலை நல்வழி வாக்குண்டாம்
 நன்றாகச் சொல்லிப்பே ரெடுக்கவேணும்!

9. 'ஸார்! அடித் தா'னென்று சண்முகம் கத்துவான்
 'சண்டை' என்பான் கிட்டு சாதுவைப்போல்
 'பாருங்கள், ஸார்! சோமு படிக்கவில்லை' யென்று
 பரிவுடன் சொல்லுவான் பரமசிவம்!

10. போதுமடி தொண்டை புண்ணாய்ப் போகும்வரை
 புத்தி சமாதானம் சொல்லிவிட்டு
 வீடுவ ரும்போது வெறுப்பும் சலிப்புமாய்
 'விடு, விடு!' என்றவர் நொந்திடுவார்

11. ஊருக் குழைத்தவர் வாத்தியார் தானிங்கு
 உண்டான வேலைக்கு ஒத்தபுள்ளி
 ரேஷன், ஸென்ஸஸ் என்று லீவிலெல்லாம் அவர்
 வேகாத வெய்யிலில் சுற்றவேணும்!

12. அட்டிகை, பொற்காப்பு, ஆரணிப் பட்டாடை
 அழகாய் உடுத்திட ஆசையில்லை
 கட்டிய காதலர் கவலை யொழிந்தென்னைக்
 கண்ணினால் பார்த்தாலே போதுமடி!

—காட்டூர் கண்ணன்.

★ வட்ட மேஜை ★

மதுரை
27—7—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

போதிய வருவாயின்றிச் சமூகத்தில் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் அநேக வகுப்பினரைப் பற்றித் தங்கள் பத்திரிகையில் ஆரம்பித்து, கிராமக் கர்ணம், ஆலைத் தொழிலாளி, ரயில்வே சிப்பந்தி, தபால்காரர்கள், பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் ஆகிய யாவரும் தங்கள் பேனா முனைக்கு அகப்பட்டு விட்டார்கள்.

இவர்கள் யாவரையும்விட, கலாசாலை வரைக்கும் படித்து விட்டு இன்று படுமோசமான நிலையிலிருக்கும் ஒரு சாரார் இருக்கிறார்கள். அவர்கள்தான் மாதம் 30 ரூபாய் சம்பளம் பெறும், மதராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷன் குழந்தைகள்—சர்க்கார் குமாஸ்தாக்கள்.

இன்றைய சர்க்காரல்ல, அட்வைஸரி சர்க்கார், ஏன், எந்த சர்க்காரையும் இயங்கும்படி செய்வது இந்த ஏழைக் குமாஸ்தாக்கள்தான். பி.ஏ., எம்.ஏ. வரை படித்துவிட்டு வயிற்றுப் பாட்டுக்காக வரும் இவ் வகுப்பாருக்குத்தான் பெரும் அநீதி இழைக்கப்பட்டு வருகிறது.

காலேஜில் மில்டனையும் ஷேக்ஸ்பியரையும் ஒருகை பார்த்துவிட்டு இன்று தாலுகா கச்சேரி குமாஸ்தா—அரண்மனைச் சேவகம்தான் மாசம் 30 ரூபாயில்! பஞ்சப்படி என்று ரூபா பதினாறு கொடுக்கிறீர்கள். காலையில் 10 மணிக்கு ஆரம்பித்து இரவு 8 மணிக்குத் தாசில்தார் வீடு வரை சென்று வருவதோடு ஒருநாள் வேலை முடிகிறது.

அடுத்த வீட்டில் டி. வி. எஸ். மோட்டார் பஸ் டிரைவர் ஒருவர் குடியிருக்கிறார். எட்டோ ஒன்பதோ படித்திருக்கிறார். சம்பளம், படி, பஞ்சப்படி போனஸ் என்று மாசம் ரூபாய் 90 வரை கிடைக்கிறது. வாரத்தில் மூன்று நாட்கள் ஓய்வு. இன்னும் என்னவோ?

"பேனாவை எறிந்து விட்டுக் கண்டக்டர் டவாலி போட்டுக் கொண்டால் என்ன?" என்று என் மனைவி சொல்கிறாள்.

அரை வயிற்றுடன் வேலை செய்ய வேண்டியிருப்பதால் குமாஸ்தாவிற்கே உரியதான அடிமை மனப்பான்மை துளிர்த்து விட்டது. எல்லாம் பசியின் விசித்திரம்தான். இனியும் சர்க்கார் தங்கள் சிப்பந்திகளின் நலத்தை அசட்டை செய்தால் ரயில்வே வேலை நிறுத்தத்தால் ஏற்படவிருந்த விபரீதம் போன்றதொன்றை ஏற்படுத்துவது தவிர வேறு வழி?

இன்றைய சர்க்காருக்கு மன மிருக்குமோ, என்னவோ! தங்கள் பத்திரிகையிலாவது இடம் கொடுங்கள். நாலு பேருக்கு எங்கள் குறை தெரிந்திருக்கிறதென்ற ஆறுதலாவது கிடைக்கட்டும்.

ரங்கராஜன்.

பாபநாசம்
1—7—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

தங்கள் பத்திரிகையைத் தொடர்ந்தாற்போல் வாசித்து வருபவர்களில் நானும் ஒருவன்.

இதுவரையிலும் உங்கள் பத்திரிகையில் ரயில்வே தொழிலாளர்கள், போஸ்ட்மென்கள், உபாத்தியாயர்கள், மில் தொழிலாளர்கள் முதலியவர்களது (புகைப் படங்களுடன்) குறைகளைப் பற்றி எழுதினீர்களே தவிர ஏழை குமாஸ்தாக்களாகிய எங்களைப் பற்றித் தாங்கள் ஒன்றுமே கூறவில்லை.

இன்று சென்னை மாகாணத்தில் சர்க்கார் குமாஸ்தாக்கள் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. அதுவும் ரெவின்யூ டிபார்ட்மென்டுக்கு ஒரு குமாஸ்தா வேலைக்கு வருவதென்றால் அவன் போன ஜென்மத்தில் பாபம் பண்ணினவனாகத்தான் இருக்க வேண்டும். ரேஷன் போன்ற திட்டங்கள் சிரஞ்சீவியாய் இருந்து வருவதால் யுத்தம் நின்றும் யுத்த காலத்தில் அதிகரித்த வேலைகள் குறைந்தபாடில்லை. பட்டாளத்திலிருந்து திரும்பி வந்தவர்களது எண்ணிக்கை எடுத்தல், அவர்களுக்கு நிலம் குத்தகைக்குக் கொடுத்தல், சன்மானம் கொடுத்தல் போன்ற வேலைகள் அதிகரித்தும் இருக்கிறது.

காலை 8-மணி முதல் இரவு 8-மணி வரையிலும் உழைத்தாலும் வேலை முடிந்தது என்ற திருப்தி அடைந்தபாடில்லை. மூன்று குமாஸ்தா வேலையை ஒரு குமாஸ்தா தலையில் கட்டியிருந்தால் அந்த வேலை எப்படி முடிவடையும்? இந்த அழகில் ஊரெல்லாம் சுற்றி விட்டுச் சாயங்காலம் 4-30 மணிக்கு ஆபீசர் ஆபீஸில் வந்து உட்கார்ந்தால் அவர் வீட்டுக்கு கிளம்புவதற்கு மணி 10 ஆகும். காலை 8-மணிக்கு வந்த குமாஸ்தா ஆபீசர் வீட்டுக்குப் போகிற வரையிலும் ஆபீஸை விட்டு நகர முடியாது.

தாங்கள் வாங்கும் ரூபா சம்பளத்தில் ஆபீஸ் வேலைக்காகப் பென்ஸில், மசி, ஊசி, நூல் முதலிய வகைகள் வாங்கித் தொலைக்க வேண்டும். மேலதிகாரிகளுக்கு வேலையில் தாமதத்தைக் கண்டு பிடிக்கத் தெரியுமே தவிர, தாமதத்தின் மூலகாரணங்கள், ஆபீஸிலுள்ள அசௌகரியங்கள் முதலியவைகள் தெரியாது—தெரிந்து கொள்வதுமில்லை.

500 ரூபாய் சம்பளம் தாமதிக்காமல் 1500 ஆக வீங்கியது. அதுபோலவே ஏழை குமாஸ்தாக்களின் 30 ரூபாய் சம்பளம் உயர்த்தப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. கண்ணியமான முறையில் பொறுத்து இருந்து கேட்டதற்கு அதிகாரிகளின் வாயில் தாமதித்து விட்டார்கள் என்று பதில் வருகிறது. தாமதம் யாரைச் சேர்ந்தது? யார் சம்பளம் உயர்த்த வேண்டும்? எதில் தாமதம்? கூட்டம், கூச்சல், வேலை நிறுத்தம் முதலியவைகள் செய்யாததுதான் தாமதமென்று கருதப்படுகிறதா? ஒவ்வொன்றுக்கும் தாம்போட வேண்டுமா? அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற வசனம் சரியாய்த்தான் இருக்கிறது. இதில்கூட ஏழை குமாஸ்தாக்கள்மீது தாமதம் என்ற பழி வாங்கப்படுகின்றது.

பொறுப்புள்ள ஆட்சிக்கும் பொறுப்பற்ற ஆட்சிக்கும் வார்த்தையில்தான் வித்தியாசம். செயலளவில் ஒன்றும் காணப்படவில்லை.

ரா. பாண்டுரங்கன்.



லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவை புரிந்து நம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோக நிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

கேஸரி குடீரம் லிமிடெட்
மதராஸ்

நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கிரைத்தண்டு, வாழைத் தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு — சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது — முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

●

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். & கோ.,

வாஸனை திரவிய வியாபாரிகள்

கும்பகோணம்

மதராஸ் விநி. ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ்ரோடு. திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும் சோல் ஏஜெண்டு :

B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

150. பாட்டும் தாளமும்

ராவணனுடைய தர்பாரிலே பெரிய பெரிய அரசர்கள் வந்து கப்பம் கட்டுகிறார்கள். அடக்க ஒடுக்கமாய்ப் பயந்து நிற்கிறார்கள். அவனுக்கு எந்த விதத்திலும் அதிருப்தி உண்டாகிவிடக் கூடாதே என்று சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். இவையெல்லாம் ராவணனுடைய பராக்கிரமத்தையும் அதிகார தோரணையையும் காட்டுகின்றன.

இனி, அவனுடைய கலை ஞானத்தையும் பண்பாட்டையும் பார்க்கப் போகிறோம்.

ராவணனுடைய வீரத்தைக் கவிகளில் பாடி, உயர்ந்த இசையில் அமைத்துப் பாடுகிறார்கள். வானலோகத்திலிருந்து தும்புரு முனிவரே வந்து பாடுகிறாரோ என்று தோன்றும். கவியும் இசையும் அவ்வளவு உயர்வாய் இருக்கின்றன.

* * *

ராவணனுடைய புகழைச் சாமான்ய ஜனப் போக்கிலே சொன்னால் சரிதானா? கற்பனா சக்தி, வெகு அலங்காரமாக வானத்தையும் பூமியையும் தொட்டுச் சுழல்கிறது.

"நாலா திசைகளுக்கும் போய்ப் போர் புரிந்து தேசங்களைக் கைப்பற்றினான். திக்விஜயம் செய்தான். அடடா! என்ன வீரம்! என்ன வெற்றி!" என்றெல்லாம் சொன்னால் போதுமா? போதாது! பாட்டாகப் பாட வேண்டும். எப்படிப் பாட வேண்டும்?

"அவனுடைய தோள்கள் என்னென்ன செய்தன, தெரியுமா? எட்டுத் திக்கிலுமுள்ள பூமியைத் தாங்கி நிற்கும் யானைகளைப் போன இடம் தெரியாமல் துரத்தி விட்டனவாக்கும்!" என்று ஆரம்பிக்கிறது பாட்டு.

திசையுறு கரிகளைச்
செற்(று); அவ் அசனும்
வரையுறக் கைலையை
மறித்து; வான்எலாம்
அசையுறப் புரந்தரன்
அடர்த்த தோள்களின்
இசையினைத் தும்புரு
இசையின் எந்தவே.

[திசையுறு கரிகளைச் செற்று: உலகத்தைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றனவாம் அஷ்டதிக்குக் கஜங்கள்: அவற்றின் நம்பிக்கைகள் தொங்கிப் பாதாளத்தையே அழுவுகின்றன: அப்பேர்ப்பட்ட பிரம்மாண்டமான யானைகளைத் தோற்கடித்து: அவ் அசனும் வரையுறக் கைலையை மறித்து: சிவபெருமானுக்கே வசை உண்டாகும்படி அவன் வீற்றிருக்கும் கைலயங்கிரியைச் செந்தூக்காகத் தூக்கிப் புரட்டிப் போட்டுவிட்டு: வான்எலாம் அசையுற: வானுலகத்திலுள்ளவர்கள் எல்லாரும் ஓரேயடியாய் நடுங்கும்படி: புரந்தரன் அடர்த்த: தேவேந்திரனையே முறியடித்த: தோள்களின் இசையினை: (ராவணனது) தோள்களின் புகழை: தும்புரு இசையின் ஏந்தவே: இசை வல்லவரான தும்புரு முனிவர் சங்கீதத்தோடு புகழ.]

நெடுங்காலமாகக் கவிகள் வீரத்தைத் தோளில் வைத்துப் பாடினார்கள்; அப்படிப் பாடுவதற்கு 'தோள் வகுப்பு' என்று பெயர். 'தோள் வகுப்பு' இன்ன முறையில் இருக்கும் என்பதற்குப் பிற்காலத்திய கலிங்கத்துப் பரணியின் பாடல் ஒன்றைப் பார்க்கலாம்.

கவன நெடும்பரி வீரர் காள்
காவிரி நாடுடை யான் இரு தோள்
அவனி சுமந்தமை பாடீரே!
அரவு தவிர்ந்தமை பாடீரே!

[கவன நெடும்பரி வீரர்காள்: வீரமான பெரிய குதிரைகளின் மேலிருந்து போர் செய்யும் வீரர்களே: காவிரி நாடுடையான் இரு தோள்: காவிரி நதி பாயும் சோழ நாட்டு மன்னனுடைய இரண்டு தோள்களும்: அவனி சுமந்தமை பாடீரே: உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைப் பாடுங்கள்:

அரவு தவிர்த்தமை பாடரோ: ஆதிசேஷன் பூமியைத் தாங்குவதை விட்டு விலகிப் போனதையும் பாடுங்கள்.]

பூர்விகமான கவிகள் பாடிய தோன் வகுப்புகளைக் கம்பர் ரொம்பவும் அனுபவித்திருக்கிறார் என்பது மேற்படி செய்யுளில் தெரிகிறது.

கவிஞர் இராவணனைப் பற்றி அவ்விதம் பாடுகிறார். பக்தருடைய கானம் எப்படியிருந்தது என்று தெரிய வேண்டாமா? சரஸ்வதியின் கடாட்சம் பெற்ற நாரத முனியே வந்து தேனொழுகப் பக்தி பூர்வமாக தெய்விகப் பாடல்களைப் பாடுகிறார். இடையிடையே வீணையில் வாசித்துக் கொண்டு பாடுகிறார். தாளங்கள் பின்னாக நின்று பணிந்து ஒலிக்கின்றன. தானம், வீணை, பாடல் எல்லாம் நெடுநாளாக வந்த பண்ணை ஒட்டியே இயங்குகின்றன.

சேணுயர் நெறிமுறை
நிரம்பல் இன்றியே,
பாணிகள் பணிசெயப்,
பழுதில் பண்ணுடை
வீணையின் நரம்பிடை
விளைந்த தேமறை
வாணியின் நாரதன்
செவியின் வார்க்கவே.

[சேண் உயர்: வெகு காலமாக ஆயி
ணக்கான வருஷமாகவே பண்பட்டு வ
நெறிமுறை நிரம்பல் இன்றியே: ஒழுங்
விட்டுச் சிறிதும் வழுவாதபடி: பாணி
பணிசெய்: தாளங்கள் பின்னுக்கு ஒது
நின்று பாடலுக்கு உதவியாய் நிற்க; பழு
பண்ணுடை: பழுதில்லாதபடி சுருதி சேர்
வீணையின் நரம்பிடை: வீணை நரம்
வாசித்து இடையிடையே; விளைந்த தேம
வாய்ப்பாட்டாகப் பாடிய பாடலும் ஏ
வீணையிலிருந்து வந்ததோ என்று ம
ளும்படியான பக்தி பூர்வமான தெய்
பாடல்களை: வாணியின் நாரதன் செவி
வார்க்கவே: சரஸ்வதியின் கடாட்சத்தி
நாரதன் தேனும் பாலும் கலந்தது போ
ராவணன் காதில் வார்க்க.]

கவியையும் தெய்வப் பாடல்களை இன்ன முறையில் இசையில் அமைத் பக்தி பாவம் நிறைந்ததாயும் தா பின்னுக்கே நிற்பதாயும் பாட வேண் என்று கம்பர் சொல்லுகிறார்; ஆயி வருஷத்துக்கு முன் அவரது காலத் போற்றி வந்த சங்கீத முறையைத் த எடுத்துச் சொல்லுகிறார்.

● ★ ●

★ நமது பஞ்சாயத்தார்

1. ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம்.ஏ., பி.எல்.,
ஆசிரியர், தமிழ் "ஹரிஜன்", சென்

2. ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ.,
திருநெல்வே

3. ஸ்ரீ என். ராமஸ்வாமி, (துமிலன்)
ஆசிரியர், "மாலதி", தியாகராய

4. ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எ
குற்றா

5. ஆசிரியர், "கல்கி", சென்னை.

மேற்கண்ட ஐவரும் நமது 1946-ம் வருஷத்துக் "கல்கி" சிறுகதைப் போட்டிக்குப் பஞ்சாயத்தாராக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மேற்படி சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் அனுப்ப வேண்டிய முடிவு தேதி: **30-9-46**

மானேஜர், **"கல்கி", கீழ்ப்பாக்கம், சென்**


DUNLOP FORT
எல்லா
கார்களையும்
பத்திரமாக
ஓட்டுவது
டன்லப்
TRADE MARK
DH 278 TM



தாமதத்திற்காக
தங்களிடம்
மன்னிப்புக் கோருகிறோம்

"கோட்டா", மூலப் பொருள்கள் முதலிய பிரச்னைகளைத் தவிர, உயர்ந்த வேலைப்பாட்டின் சேரமான ஒரு பேவர் - லூபா கடியாரத்தை உற்பத்தி செய்ய அதிக தாமதம் ஏற்படுகின்றது. உங்களைக் காக்க வைப்பதற்காக வருந்துகிறோம். ஆனால் தயை செய்து இன்னும் சற்றுப் பொறுக்கக் கேட்டுக் கொள்கிறோம். பேவர் - லூபா கடியாரத்தைப் பெற்று நீங்கள் கூடிய சீக்கிரம் பெருமை யடைவீர்கள்.

FAVRE-LEUBA

பேவர் லூபா & கம்பெனி லிமிடெட் ★ பம்பாய் ★ கல்கத்தா

Ad. No. 178

ஆசாபாசம்

ஆர். கிருஷ்ணவேணி

"அவனுடைய நிழல் என் வீட்டுமேலே படக்கூடாது. அவன் எக்கேடாவது கெட்டு ஊருக்கு மூளைத்துப் போகட்டும். பிள்ளையாம்! பெற்று வளர்த்த அப்பன் பேச்சைக் கேட்காத பிள்ளை, என்ன பிள்ளை?"

"சேச்சே! சிறுபிள்ளைத்தனமா அவன் தான் அப்படிப் பேசிட்டான்னு, வாழ்ந்து பழுத்த நீ கூடவா இப்படிச் சொல்றது, அம்பலம்! அவன் படுகிற கஷ்டத்தை உன் கண்ணாலே பார்த்துமா உன் மனசு இறங்கலே?"

"ஆமாம், மூத்தவரே! என் பண்ணை ஆட்களை வேலை வாங்குகிற 'அமுசை' அவனுக்கு இருக்க, அவன் போய் நாடாட்டமா உழைக்கிறதைப் பார்த்தா என் வயிறு புண்ணாத்தான் போவுது. ஆனா இவ்வளவு கஷ்டப்பட்டும் அந்தப் பயல் நெஞ்சழுத்தம் போகவில்லையே, நான் என்ன செய்யிறது?"

"அம்பலம்! நேத்து அவன் வந்து என் கிட்டே சொல்லச்சே, அவனையும் மறந்து ஓ'வென்று அழுதுவிட்டான். பாவம், என்ன இருந்தாலும் பிள்ளை இல்லே, என் நெஞ்சு கொழைஞ்சு போச்சு. அந்தச் சிசுவையும் வைச்சுக்கிட்டுத் தத்தளிக்கிறான், பாவம்! பெற்ற பிள்ளை மனசு நொந்து போற கதிக்கு நல்ல கதி இல்லே. அம்பலம்! நான் சொல்றதைக் கேளு! நாளைக் காலையிலே அவன் வருவான்; ஒண்ணும் பேசாமல் கூட்டிக்கோ!"

"உம்... வரட்டும். வந்து 'அப்பா! நான் செஞ்சதெல்லாம் தப்பு!' என்று என் காலிலே விழுந்து கேட்கட்டும்; பின்னாலே பார்த்துக்கலாம்...... சரி, நீங்க போய்விட்டு வாங்க! நான் பார்த்துக்கிறேன்" என்றான் அம்பலம்.

• • •

பெரிய பள்ளம் நாட்டாண்மைக்கார அம்பலத்தின் மனம் அவ்வளவு தூரம் உடைந்து போய் இருந்தது. அவன் மகன் செல்லப்பன் பக்கத்தில் எவ்வளவு நியாயம் இருந்த போதிலும் கிழவன் மேலும் நாம் கொஞ்சம் அனுதாபப்பட வேண்டியிருக்கிறது. அவன் சிறு வயது முதல் பிடிவாதக்காரன். அதுவும் அவனுக்கு வயது வந்ததிலிருந்து பத்துப் பதினைந்து பண்ணை ஆட்களைக் கூட்டி, தன் இஷ்டப்படி ஆட்டி வைத்துப் பழகியவன். அவன் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசுவதென்பது அவனுக்குக் கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை.

பெரிய பள்ளம் கிராமத்தில் நாட்டாண்மைக்கார அம்பலத்திற்கு நல்ல மதிப்பு. பத்துக் காணி முதல்தரமான புஞ்சையை அவனே தன் மேற்பார்வையில் பயிரிட்டு வந்தான். கிராமப் பொதுக் காரியங்களிலும் தேர் திருவிழாக்களிலும் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டு நடத்துவான். கிராம அதிகாரிகளையும் மற்ற மேலதிகாரிகளின் குட்டி தேவதைகளையும் வசியப் படுத்திக் 'கைக்குள்' போட்டுக் கொண்டிருந்தான். ஆகையால் அவன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் யாவும் அவன் இட்டது சட்டமாகவே நடந்து வந்தன.

இப்படியெல்லாம் இருக்க, தன் மகன் மட்டும் தன் பேச்சைக் கேட்கவில்லையே என்று அவன் ஆத்திரப்படுவது இயற்கை தானே!

அந்தக் காலத்தில் "முருகம்மாளைக் கல்யாணம் செய்து கொள்!" என்று தன் தகப்பன் சொன்னதை அம்பலம் தட்டினானா? இல்லை. இத்தனைக்கும் முருகம்மாள் நல்ல கறுப்புத்தான். அதனால் என்ன? அவள்தான் குடும்பத்திற்கு லாயக்கானவளாய் இருந்தாள். பம்பரம் போல் சுழன்று சுழன்று வேலை செய்ததோடு எவ்வளவு அடக்கம் ஒடுக்கமாயும் இருந்தாள்! தனக்கு முதலில் கொஞ்சம் பிடிக்காமல் இருந்தபோதிலும் பின்பு அவள் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாய் இருந்தது! நன்றாக வாழ்ந்து நான்கு வருஷங்களுக்கு முன் அவள் இறந்ததை அவனால் சகிக்க முடிந்ததா? "அப்பாடி! இந்தக் கிழவனுக்கு இன்னும் பெண்சாதிமேலே எவ்வளவு ஆசை!" என்று கிராமத்து ஜனங்கள் ஆச்சரியப் படும்படியாக அல்லவா அவன் அழுது அங்கலாய்த்தான்!

2

தன் மனைவி இறந்த பிறகு, தன்னுடைய குணமறிந்தும் முகமறிந்தும் பணி

விடை செய்வதற்குத் தன் விதவைச் சகோதரியை மூங்கிற் பள்ளத்திலிருந்து வரவழைத்துக் கொண்டான் அம்பலம். அவள் தனது ஒரே செல்வப் பெண்ணான செங்கமலத்தையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்தாள்.

செங்கமலம் அம்பலத்தின் வீட்டில் அடி எடுத்து வைத்த நாளாக அவன் வீட்டில் லக்ஷ்மி கலை தாண்டவமாடத் தொடங்கியது. பசுங் கொடியைப்போல் செழித்திருந்த அவள் மேனி அசைவில், இளமையின் இன்ப மலர்கள் பூத்துச் சொரிந்தன. செட்டும் சீருமாக அவள் செய்த குடித்தனம் அவனுக்குச் சந்தோஷத்தை அளித்தது. கிழவனின் சபல ருசிக்கு ஏற்றவாறு அவள் சமைத்துப் போடவே, அவன் மனம் குளிர்ந்தது. தன் ஒரே மகன் செல்லப்பனைக்கூட அவன் அவ்வளவாகக் கவனிப்பதில்லை. "செங்கமலம்! சாப்பிட்டாயா? கோழி கூவையிலே எழுந்திருச்சவ இன்னுமா படுத்துக்கலே? போ, போய்ப் படுத்துக்க, செங்கமலம்!" என்று செங்கமலத்தைப் பற்றித்தான் அவனுக்குச் சதா சிந்தையும் கவனமும்.

அறுபது வயதாய் இருந்தாலும் தேகக் கட்டு குலையாமல் இருந்தான் அம்பலம். ஆகையால் செங்கமலத்தின்மேல் அவன் வைத்திருந்த வாஞ்சையைக் கண்ட கிராமத்து ஜனங்களில் சிலர், கிழவன் அவளை இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொள்வான் என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அவன் உள்ளத்தில் இருந்ததென்னவோ வேறு. தன் மகன் செல்லப்பனுக்கு அவளைக் கல்யாணம் செய்து வைத்துச் செங்கமலத்தைத் தன் வீட்டின் தூங்கா விளக்காகக் கொள்ளவேண்டும் என்பதுதான் கிழவனின் ஆசை.

ஆனால் செல்லப்பன் நினைத்ததோ வேறு விதம். செங்கமலத்தின் பேச்சிலும், சிரிப்பிலும், கண்ணசைவிலும் அவன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்த போதிலும் அவன் மனதில் உள்ளூற ஏதோ ஒரு வெறுப்பு வளர்ந்து கொண்டே வந்தது. தன் தகப்பனை அவள் இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டு, சொத்தைப் பங்கு போட்டுக் கொள்ள வந்திருக்கிறாள் என்பதுதான் அது!

"பாவம்! அவள் ஓய்ச்சல் ஒழிவில்லாது மலர்ந்த முகத்துடன் சூரியோதயம் முதல் இரவு வரை செய்து வந்த கிரக சேவையெல்லாம் கிழவனின் அனுதாபத்தையும் செல்லப்பனின் அன்பையும் அடைவதற்காகத்தான் என்பதை அவன் கண்டானா?

3

கோடைச் சூறாவளியில் பட்ட மரம் சாய்வதைப் போல் அந்தக் கார்த்திகை மாதத்துக் காலராவில் தன் தமக்கையைப் பறி கொடுத்து விட்டான் அம்பலம். அதுமுதல் அவனுக்குச் செங்கமலத்தின் கல்யாணத்தைச் சீக்கிரமாக முடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. "இந்தக் கூண்டை விட்டுக் குருவி பறந்து போவது இன்றைக்கோ, நாளைக்கோ? தனக்கு நெய்ப் பந்தம் பிடிக்கவாவது ஒரு பேரப்பிள்ளை வேண்டாமா?" என்று எண்ணியவனாய்க் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்ய ஆரம்பித்தான் கிழவன்.

இந்தக் கல்யாண ஏற்பாடுகள் உள்ளூறப் புழுங்கிப் புண்ணாகியிருந்த செல்லப்பனின் மனதில் வேதனையை வளர்த்தது. "சீச்சீ! இந்தக் கிழங்களே இப்படித்தான்! வயதாய் விட்டால் புத்தி தடுமாறி விடுகிறது! இவனும் கெட்டான், இவன் சொத்தும் கெட்டது! இவனே செங்கமலத்தைக் கல்யாணம் செய்துகொண்டு சுகமாக இருக்கட்டும். கையும் காலும் இருக்கும் போது என் வயிற்றுக்குத்தானா சோறு கிடைக்காது?" என்ற எண்ணங்கள் அவன் மனதில் எழுந்தன. முகூர்த்தத்திற்கு நாலைந்து நாள் இருக்கும்போது செல்லப்பன் பெரிய பள்ளத்தை விட்டுக் கிளம்பி விட்டான்.

செல்லப்பன் திடீரென்று காணமற் போன செய்தி கிழவனை ஒரு உலுக்கு உலுக்கியது. அப்போதுதான் அவன் தன் மகன் விஷயத்தில் அவ்வளவு நாட்களாகப் பாராமுகமாக இருந்து விட்டதை எண்ணி நொந்து கொண்டான். கல்யாண ஏற்பாடுகள் யாவும் வீணாயின.

சில நாள் கழித்துச் செல்லப்பன் சீர்காழி மில்லில் வேலை செய்துகொண்டு இருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டதும் வில் வண்டியில் தானே கிளம்பினான் அம்பலம். அவன் கிழ உடலில் அப்போது வாலிபத் துடிப்பு காணப்பட்டது. குழந்தை உள்ளத்

ல் தோன்றும் ஆத்திரமும் அன்பும் கலந்தன அவன் மனதில்.

வளருக்குத் திரும்பும்படி தன்னால் ஆன ட்டும் சொல்லிப் பார்த்தான் அம்பலம். னால் செல்லப்பன், "இரண்டாந் ாரம் கல்யாணம் செய்து கொள்ளப் பாரும் மோகத்தில் தன் மூத்தான் மகனைத் ரத்திவிட்டான், கிழவன்!" என்று ஊரார் பச்சுக்குப் பயந்துதான் தன் தகப்பன் ன்னைக் கூட்டிப் போக அவ்வளவு தூரம் ்புறுத்தி அழைக்கிறான் என்று தப்பாக னைத்து விட்டான். ஊரார் பேச்சு அவன் னதில் அவ்வளவு தூரம் ஊறிப்போய் ருந்தது. அம்பலத்தின் கூட வந்தவர்கள் பசாரத்தை விண்டுச் சொல்லி அவனை ்புறுத்தவேதான் அவனுக்கு விஷயம் ளக்கிற்று.

ஊரார் வம்பை உண்மை என்று னைத்தது எவ்வளவு தப்பு! செங்கமலம் ன்ன நினைப்பாள்? அவள் தனக்குச் சய்த ராஜோபசாரங்களுக் கெல்லாம் லன் இதுதானா? அவள் முகத்தில் னபடியும் எப்படி விழிப்பது? அவள் பெய க்குத் தன்னால் உள்ள களங்கத்தை ப்படிப் போக்குவது?

அவன் சிந்தனை சுழன்றது.

"அப்பா! என்னை விட்டுவிடுங்கள். னக்குக் கல்யாணமே வேண்டாம். நான் ட்டுக்கும் வர முடியாது!" என்றான்.

ஏன் அப்படிச் சொன்னான்? அது அவ க்கே தெரியாது! ஒருக்கால் அதற்குத் ான் விதி என்று பெயரோ?

அம்பலத்திற்கு அடக்க முடியாத கோபம் ந்து விட்டது.

"நீ எக்கேடாவது கெட்டுப் போ! இனி னக்கு ஒரு அப்பன் இருக்கிறான் என்பதை றந்துவிடு. உன் நிழல்கூட என் பிணத்தின் மல் படக்கூடாது. ஒரு குழி நிலங்கூட னக்குக் கிடையாது!" என்று சொன்ன பாது கிழவன் அம்பலத்தின் கண்களில் ப்பொறி பறந்தது. நாக் குழறியது.

கிழவனின் உள்ளக் கொதிப்பு மயிலைக் ளைகளின் முதுகில் சவுக்கடிகளாக விழுந் ன. பாவம்! அவை பட்ட அடிகளின் யனாக ஒரே மணி நேரத்தில் சீர்காழியி ருந்து பெரியபள்ளத்திற்கு வந்து மூச்சு ிட்டன!

4


அதுவரை நிமிர்ந்து நடந்த அம்பலம் னே அன்று முதல் குனிந்து நடக்கத் தலைப்பட்டான். தன் மதிப்புக்கு, தன் வார்த்தைக்குப் பங்கம் விளைந்து விட்டதாக அவன் மனம் அவனை வாட்டியது.

செங்கமலம் இளைத்துத் துரும்பாகி விட்டாள். அப்போது ஓடி ஓடிச் செய்த வீட்டு வேலைகள் இப்போது அவளுக்கு மலை யாகத் தோன்றிற்று. கிழவன் செங்கமலத் திற்கு வேறு மாப்பிள்ளை தேடிக் கல்யா ணம் செய்ய முயன்றதையும் அவள் தடுத்து விட்டாள்.

குளுவளியில் கொம்பொடிந்து நிலத் தில் புரண்டு கொண்டிருந்த பூங் கொடி கிடைத்த கொம்பைப் பற்றிக் கொண்டு படர முயற்சிப்பது போல், செல்லப்பன் தன் முறிந்த மனத்தைத் தேற்றி மகிழ்விக்க ராஜாயியின் கரத்தைப் பிடித்தான். மில்லின் காவற்காரன் கல்லா னுக்குச் சாப்பாடு கொண்டு வரும்போது ராஜாயி செல்லப்பனைப் பார்ப்பாள். அவன் அவளைப் பார்த்துப் பெருமூச்சு விடுவான். இப்படி நடந்த அவர்கள் காதல் நாடகம் ஆறு மாதத்திற்குப் பிறகு அவர்களைத் தம்பதிகளாக்கியது.

ஒரு வருஷம் ஓடி ஒளிந்தது. அதற்குள் செல்லப்பனுடைய மாமன் கல்லான் சுவர்க் கத்தைக் காக்கப் போய்விட்டான். பூராக் குடும்பப் பொறுப்பும் செல்லப்பன் தலையில்

சரியான புத்திமதி



பையன்:—அம்மா! எங்க பள்ளிக்கூடத்திலே விளையாட்டுப் பந்தயம் வச்சிருக்கா. நான் ஓட்டப் பந்தயத்திலே சேர்ந்திருக்கிறேன்.

தாயார்:—பார்த்து ஓடுடா, கண்ணு! நீ பாட்டுக்கு அவசரமா ஓடிக் காலைக் கையை ஒடிச்சுக் காதே! மெதுவாய் ஓடு! —பா. ஸ்ரீ. ஸ்ரீ.

விழுந்தது. இந்தச் சமயத்தில் ராஜாயி வேறு ஸ்வர்ண விக்கிரகம் போன்ற ஆண் குழந்தையைப் பெற்று அவனைச் சோதனைக்கு உள்ளாக்கினாள். இது போதாதென்று மில்லில் அரிசி 'ஸ்டாக்' அதிகமாய் விட்டதால் கொஞ்ச காலைக்கு நெல் அரைப்பதையே நிறுத்தி விட்டார் முதலாளி. இதன் காரணமாகச் செல்லப்பனைச் சேர்த்துப் பதினைந்து பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஒரு கவலையுமின்றி வளர்ந்த செல்லப்பனுக்கு வாடி வதங்கிய மனைவி முகத்தையும் துவண்டு விழுந்த சிசுவின் முகத்தையும் பார்க்க நரக வேதனையாய் இருந்தது. கிடைத்த கூலி வேலையைச் செய்து களைப்பில் நடைப் பிணமாகிக் கொண்டு வந்தான்.

அவன் குழந்தை முகத்தைப் பார்த்து மெய்ம் மறந்திருக்கும் வேளையில், "உங்கப்பனை உரிச்சி வைச்சிருக்கு குழந்தை என்று சொல்றியே, இந்தச் சிசு முகத்தைப் பார்த்தாலாவது அவர் மனம் இளகாமலா போகும்? பெத்த மனம் பித்துத்தானே! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு! இதோ பாரு, ஒரு காலைக்கு உங்க ஊருக்குப் போய்விட்டுத்தான் வாயேன்!" என்று ராஜாயி கெஞ்சினாள். அவனுக்கும் லேசாக மனதில் சபலம் தட்டத் தொடங்கியது. ஆத்திரம், வைராக்கியம், ரோசம் எல்லாம் எவ்வளவு தூரம்? பசி வந்தால் பத்தும் பறந்திடாதா?

செல்லப்பன் தன் குழந்தையுடன் பெரிய பள்ளத்திற்கு வந்ததும் முதலில் பெரிய பண்ணைப் பிள்ளை வீட்டுக்குப் போனான். அவனையும் அவன் கோலத்தையும் பார்த்த பிள்ளையின் மனம் உண்மையிலேயே இளகி விட்டது. அதனால்தான் அம்பலத்தின் வீட்டுக்குத் தூது போய் எப்படியாவது அவன் மனதை மாற்ற முயன்றார்.

5

பெரிய பள்ளம் கிராமத்துப் பெரிய பண்ணைப் பிள்ளை சொன்னபடியே செல்லப்பன் தன் மகனைத் தூக்கித் தோள் மேல் வைத்துக்கொண்டு கூனிக் குறுகி அப்பன் கண்ணில் படும்படியான இடத்தில் நின்று கொண்டிருந்தான். அவ்வழியே கழனிக்குச் சென்று கொண்டிருந்த அம்பலம், செல்லப்பனை ஒரு கணம் பார்த்தான். பிறகு வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நடந்தான். "அப்பா!" என்று கூப்பிட்டு ஒரு அடி எடுத்து வைக்கப் பார்த்தான் செல்லப்பன். வார்த்தைகள் அவன் தொண்டையை விட்டு வெளிவரவில்லை; கால்களும் நகரவில்லை.

பிறகு வந்த வழியே திரும்பிப் போய்க் கொண்டிருந்த பொழுது, "அத்தான்! அத்தான்!!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான்.

அவள் யார்? செங்கமலமா? ஏன் இப்படி இளைத்து வெளுத்துப் போயிருக்கிறாள்?

"செங்கமலம்! இன்னும் இந்தப் பாவி அத்தானை மறக்கவில்லையா, நீ?" என்று சொல்லும்போது அவன் கண்களிலிருந்து நீர் பொல பொல வென்று உதிர்ந்தது. "இந்தா, இந்தக் குழந்தையைக் காப்பாற்று! உன் மனதை அறிந்து கொள்ளாமல் புண் படுத்தி விட்டேன். கடவுள் எனக்குச் சரியான தண்டனை......" என்று இன்னும் ஏதோ பிதற்றுவதற்குள் அவன் அப்படியே சுருண்டு கீழே விழுந்து விட்டான்.

இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களுக்கெல்லாம் தன் மகன் கடுஞ் சுரத்தோடு எமனுடன் வாதாடிக் கொண்டிருப்பதாகச் செய்தி கேட்ட அம்பலத்தின் மனம் இளகியது. ஓடோடியும் சென்ற கிழவன், செல்லப்பன் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலை நெருங்கினான். அவனைக் கண்டதும் செல்லப்பனின் உடல் நடுங்கியது. முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டான். அருகில் சென்று கிழவன் உட்கார்ந்தவுடன் செல்லப்பன் தேம்பித் தேம்பி அழுதான்! இந்தக் கோலத்தைக் கண்ட கிழவன் கீழே புரண்டவாறு கட்டை விரலை ருசி பார்த்துக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டான். செல்லப்பன் கண்களைத் துடைத்தான். தன் கண்களையும் துடைத்துக் கொண்டான்!

"அப்பா!...குழந்தை!" என்று குழறிய வாறு மிரள மிரளச் செங்கமலத்தையும் தன் தகப்பனையும் ராஜாயியையும் மாறி மாறிப் பார்த்தான் செல்லப்பன். அவன் கண்கள் அப்படியே செருகிக் கொண்டன. 'மனைவியையும் குழந்தையையும் வறுமையினின்றும் விடுதலை செய்து விட்டோம்' என்ற சந்தோஷத்தில் அவன் ஆத்ம சாந்தியடைந்தது.

• • •

அம்பலக்காரன் இப்போது நிர்விசாரமாய் இருக்கிறான். தனக்கும் நெய்ப் பந்தம் பிடிப்பதற்கு ஒரு பேரன் இருக்கிறான் என்னும் திருப்தி அவனுக்கு!

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

ஜூலை 26உ திருச்சியில் ரஸிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அபூர்வ நாதஸ்வரக் கச்சேரி, எவ்வித ஏமாற்றத்துக்கும் இடங் கொடாமல் நடந்தேறியது. திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளைதான் வாசித்தார்; சந்தேகமில்லை. "கச்சேரி முழுவதையும் கேட்ட பிறகுதான் சொல்ல வேண்டும்; அவசரப் படாதீர்" என்று எச்சரிக்கை செய்த நண்பர்களும், கல்யாணியையும் தோடியையும் கேட்ட பிறகு, அவர்தான் என்று சமாதானம் அடைந்தார்கள். அதிலிருந்து அந்த வாத்யத்தில் நிகரற்ற அவரது தனி மேதைத்தன்மை அன்று வடுப்படாது நன்கு பிரதிபலித்தது என்று சொல்லத் தேவையில்லை. வட இந்திய ஷெனாயோ என்று பிரமிக்கவைக்கும் அடங்கிய நாதக் குளிர்ச்சியும், அபார கற்பனையும், அழகு பாணியும், பாவப்பொழிவும் எல்லாம் ஒருங்கே சேர்ந்து இலங்கின. எடுத்தவுடன் ராகஸ்வரூபம் விளங்கும் திறனும் தொட்ட இடமெல்லாம் இழைந்து பேசும் வனப்பும், வளைவு குழைவுகளின் பெருமிதமும், அவருக்குப் பிரத்யேகமான ஜாரு கமகப் பிடிகளும், தொடான கற்பனை வக்ர சஞ்சார சங்கதிகளில் கூட சுருதி சுத்தமும், பாணியழகும், வாய்ப்பாட்டில் கொஞ்சுவதுபோன்ற அடுக்கு சஞ்சாரக் கோவைகளும், அவர் வாத்யத்துக்குத் தனிப்பெருமை கொடுக்கின்றன. பல்லவி ராகமாலிகையில், பௌளியின் ராகபாவம் பொழியக் கொடுத்த ஒரு வளைவுக்கே அஷ்ரபையும் அல்லது ஸ்வரலட்சம் கொடுக்கலாம். அவருக்குப் பக்க வாத்யமாய் அமைந்த திருவீழிமிழலையில் முத்துவீரப் பிள்ளையின் தவிலும் அடங்கிய நாதத்துடன் சுகமாயிருந்தது.

23உ சென்னையில் எஸ். பாலசுப்ரமணியம் நயசாரீர பிர்க்கா, கற்பனைப் பொழிவுடன் வழங்கிய தோடி, நாட்டக்குறிஞ்சி ராகங்களும் 'ராஜுவெடல' கிருதியில் விழுந்த நிரவல் ஸ்வரங்களும் மனதைக் கவர்ந்தன.

24உ சென்னையில் விஞ்சமூர் வரதராஜய்யங்காரின் பைரவி ராகம் தானம் பல்லவிக் கச்சேரி உயர்தரமாயிருந்தது. நயமான ரவை சாரீரத்தில் பிர்க்காப் பொழிவுடன் சரளமாய் விட்டுப் பாடினார்.

அன்று அதே நிலையத்திலிருந்து கேட்ட திருவீழிமிழலையில் ஸ்ரீ நாதன் கச்சேரியும் குறிப்பிடத்தக்கது. நடுத்தர சாரீரம்: நல்ல ஞானபாவம். உதயரவிச்சந்திரிகா, காபி, காம்போதி ராகங்கள் தரமாயிருந்தன.

25உ திருச்சியில் கே. வாஸுதேவன் பாடிய பிலஹரி, வஸந்தா ராகங்களும் உருப்படிகளும் சுகமாயிருந்தன.

26உ சென்னையில் எஸ். வி. சௌந்தரராஜன், பி. ஸரஸ்வதி இவர்களின் கானங்கள் கவனத்தை இழுத்தன. முன்னவர், ரஞ்சக சாரீரமும், விறுவிறுப்பான வழியும் கொண்டு வழங்கிய பிலஹரி சங்கராபரணங்களும் உருப்படிகளும் உயர்ந்த ரகமாயிருந்தன. பின்னவர் மதுரமான குரலில் காம்போதியை விஸ்தாரமாயும் அழகிய சஞ்சாரங்களுடனும் பாடினார். 'ஸ்ரீரகுவர' கிருதியில் அமைந்த ஸ்வரப்ரஸ்தாரங்கள் அழுத்தமாயும், தெளிவாயும் விளங்கின.

27உ சென்னையில் எஸ். சங்கரன், சுந்தரி தம்பி இவர்களின் கச்சேரிகள் எதிர்பார்த்த படி கலகலப்பாயிருந்தன.

28உ சென்னையில் டி. ஆர். பாலசுப்ரமணியம் பிர்க்காப் பொழிவும், விறுவிறுப்பும் கொண்டு கல்யாணியை ஆலாபனை செய்து, 'ஏதாவுனரா' கிருதியை நிதானமாயும் வனப்பாயும் கையாண்டார்.

29உ சென்னையில் எஸ். கே. வேதா, திருச்சியில் பரூர் கே. ராதாமணி இவர்களின் இனிய கானங்கள் மனோஹரமாயிருந்தன. அன்று இரவு திருச்சியிலிருந்து கேட்ட டி. எஸ். ஹரியாஸநாதத்தின் பாட்டும் கவனத்தைக் கவர்ந்தது. விஜயநாகரீ, சாருகேசி இவைகளோடு, தேனுகா என்ற அபூர்வ மேள ராகத்தையும் திறம்பட வழங்கினார்.

நாகஸ்வரத்துக்குத் தவில் பக்கமேளம் என்றுதான் இதுவரை நினைத்திருந்தோம். 29உ திருச்சியில் தவில் கச்சேரி என்று அதற்குத் தனி கச்சேரிப் பெருமை கொடுத்தது விசேஷம். ஒரு தவிலே காதைக் கிழிப்பதற்குப் போதும். நாலு தவில்கள் சேர்ந்து விட்டால் கேட்க வேண்டுமா? இருந்தாலும் திருவீழிமிழலை சகோதரர்கள் தோடி ராகத்தையும் பல்லவியையும் சுகமாய் வாசித்த பிறகே தவில்களின் தனிக் கச்சேரி நடந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இதுவரை கேட்ட ரேடியோ நிகழ்ச்சிகளில் ஜூலை 30உ திருச்சியில் 'நமது சங்கீதம்' என்று குறிப்பிட்டு நடந்த நமது சங்கீத முறைகளைப் பற்றிய நிரூபணத்துடன் சேர்ந்த விமர்சனம் கலையுலகத்திற்கு மிகவும்



"பசங்களா, ஏன் சண்டை போடுறீங்கள்? நீங்கள் சண்டையை நிறுத்தினால் ஆளுக்கு இரண்டணா தருகிறேன்!"

"அதைக் காட்டிலும், இந்தச் சண்டையில் ஜெயிக்கிறவனுக்கு எட்டணா என்று வைத்து வேடிக்கை பாருங்கள், ஸார்!"

உபயோகமானதாகத் தோன்றியது. பண்டைக் காலத் தமிழ்ப் பண், ஹிந்துஸ்தானி சங்கீதம், இப்போது நடைமுறையிலிருக்கும் கர்நாடக சங்கீதம் இவைகளின் அடிப்படையான ஒற்றுமையை விளக்கியது. இப்போது சௌராஷ்டிரம் என வழங்கும் ராகம் இம் மூன்று முறைகளிலும் எவ்வாறு ஒலிக்கிறது என்பது நிதர்சனம் செய்யப்பட்டது. காஞ்சீபுரம் கோ. சாரங்கபாணி செட்டியார் தமிழ்ப் பண் முறையையும், லக்னௌ சங்கீத கலாசாலைத் தலைவர் எஸ். என். ரதன்ஜங்கர் ஒலிப்பதிவு மூலம் வடநாட்டு முறையையும், செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் இப்போதைய கர்நாடக சங்கீத முறையையும் பாடி விளக்கினார்கள், வயலின் வித்வான் டி. கே. ஜயராமய்யர் இவைகளின் ஸ்வரங்களையும், அடிப்படையான ஒற்றுமையையும் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னாலேயே உன்னத வளர்ச்சி யடைந்திருந்த தமிழ்ப் பண்களின் அருமையையும் எடுத்துக் கூறினார். எல்லாம் ரஸமா யிருந்தது. இத்தகைய நிகழ்ச்சிகள் கலையுலகத்திலுள்ள தவறான அபிப்பிராயங்களை நீக்குவதோடுகூடப் பழந் தமிழ்நாட்டுக் கலைகளின் பெருமையை அறிவதற்கும் மிகவும் உதவியா யிருக்கும்.

ஆகஸ்டு 5ல் திருச்சியில் நடந்த மதுரை மணி அய்யரின் கச்சேரி வழக்கம்போல் முதல் தரமா யிருந்தது. விஸ்தாரமாய் ஆலாபனை செய்த கல்யாணியும், அதற்கு முன் பாடிய பூர்விகல்யாணி, சுத்ததன்யாசி ராகங்களும் வனப்பா யிருந்தன. எல்லா உருப்படிகளுக்கும் விடாது கற்பனை ஸ்வரங்களைப் பொழிந்தார்.

ஜூலை 30ல் திருச்சியிலிருந்து கேட்ட கல்லிடைக்குறிச்சி என். ஹரிஹரய்யரின் கச்சேரியும் சென்ற வாரத்திய உயர்ந்தரக வகைகளில் ஒன்று. நய சாரீரம், நல்ல உருப்படிகள் இவற்றுடன் கற்பனையும் சேர்ந்திருந்தது. மலையமாருதமும், கீரவாணியும் சாரங்காவும் வனப்பிலும் முதல் ஸ்தானத்துக்குப் போட்டியிட்டன.

* * *

ஜூலை 31ல் சென்னையில் எச். பத்மநாபன், திருச்சியில் ஆர். சுப்ரமணியம் இவர்களின் கச்சேரிகள் குறிப்பிடத் தக்கவை. முதல்வர் தடித்த சாரீரத்தில் நல்வழியுடன் வழங்கிய தன்யாசி, கல்யாணி ராகங்கள் தரமாயிருந்தன. இரண்டாமவர் பாடிய தோடி சுகவழியில் இழைந்தது.

ஆகஸ்டு 1ல் திருச்சியில் டி. என். கல்யாணம் மணி இருவரும் சேர்ந்து பாடியது கவனத்தை இழுத்தது. ஒருவர் ரஞ்சக சாரீரத்தில் பேகடா, ஆரபி, உசேனி ராகங்களை அழகுபட ஆலாபனை செய்தார். உருப்படிகளில் இரு குரல்களும் சேர்ந்து கேட்டன

2ல் சென்னையில் பாலக்காடு சுப்ரமணிய அய்யர் எஸ். ஸ்ரீனிவாசராவ் இவர்களின் கானங்கள் தரமா யிருந்தன. முன்னவரது ஹிந்தோளம் வாசஸ்பதி ராகங்களும், பின்னவரது பிலஹரியும் எடுப்பா யிருந்தன.

4ல் திருச்சியில் பாடிய கே. வி. சுப்ரமணியத்துக்கு நய சாரீரம், நல்ல உருப்படி. தனக்குக் கிடைத்த 35 நிமிஷங்கள் இரு பாகமாய்ப் பிரிக்கப்பட்டிருந்தன. இருந்தாலும் வாசஸ்பதி, கரஹரப்ரியா பைரவி ராகங்களையும் உருப்படிகளையும் விருவிருப்புடன் பாடினார்.


அன்று சென்னையில் டி. வி. வஸந்தா இனிய குரலில் ஆனந்தபைரவியைத் தெளிவாயும் சுகமாயும் வழங்கினார்.

★ ★ ★ ★ லண்டனில் தீபாவளி! ★ ★ ★ ★


டாக்டர் ராஜன் அவர்கள் வைத்தியப் படிப்புக்காக லண்டனுக்குச் சென்றிருந்த சமயம் ஸ்ரீ வ. வே. சு. ஐயருடன் இந்தியா விடுதியில் தங்கியிருந்தார். அப்போது நடந்த ஒரு ருசிகரமான சம்பவம் வருமாறு:—

ஸ்ரீ வ. வே. சு. ஐயர் அச்சமயம் லண்டனில் வசித்து வந்த சுமார் எழுநூறு இந்தியர்களையும் ஒன்று கூட்டி அவர்களனைவருக்கும் "நாம் அனைவரும் இந்தியர்கள்" என்ற உணர்ச்சி வரவேண்டுமென்பதற்காக ஒரு பொதுக் கூட்டம் நடத்த விரும்பினார். ஆனால் பொதுக்கூட்டத்துக்கு யார் தலைமை வகிப்பது என்ற பிரச்னை எழுந்தது. அக்காலத்தில் ஸ்ரீமான் காந்தி தென்னாப்பிரிக்க இந்தியர்கள் படும் தொல்லையைப் பார்லிமென்டு சபையாருக்கு எடுத்துரைக்கும் பொருட்டு லண்டனில் வந்து தங்கி யிருந்தார்.

ஸ்ரீ வ. வே. சு. ஐயர் அவரை அணுகி, "தீபாவளிப் பண்டிகையை ஒட்டி இங்கே இந்தியர்கள் கூட்டம் போட்டிருக்கிறோம். விழாவுக்குத் தாங்கள் தலைமை வகிக்க வேண்டும்" என்றார். காந்திஜி ஒரு நிபந்தனையின்பேரில் ஒப்புக்கொண்டார். அதாவது அன்று நடக்கும் விருந்து இந்திய உணவாகவும் மாமிசமில்லாத அஹிம்ஸா உணவாகவும் இருக்க வேண்டுமென்பதுதான் நிபந்தனை. அதன்படியே இந்தியச் சமையல் செய்வதற்காக டாக்டர் ராஜன் உள்பட ஆறு பேர் ஒப்புக் கொண்டார்கள். அவர்கள் வேலை செய்யத் தொடங்கி அரை மணி நேரத்துக் கெல்லாம் நடுத்தர வயதுள்ள ஒரு இந்தியர் வந்து சமையல் வேலையில் கலந்துகொண்டு ஊக்கம் காட்டினார். டாக்டர் ராஜனும் மற்றவர்களும் அவரைச் சரியானபடி வேலை வாங்கினார்கள். பாத்திரம் கழுவுவது, தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பது முதலிய முரட்டு வேலைகளெல்லாம் அவரைக் கொண்டு செய்துகொண்டார்கள். சுமார் ஆறு மணிக்குச் சமையல் அறையைப் பார்க்க ஸ்ரீ வ. வே. சு. ஐயர் வந்தார். ஸ்ரீ அய்யர் அங்கு வியர்த்து விறுவிறுக்க வேலை செய்து கொண்டிருந்த அந்த மனிதரைப் பார்த்துவிட்டு டாக்டர் ராஜுவிடம் "இவரை யார் இப்படி வேலை செய்யச் சொன்னது? இவர்தான் இன்று நம் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கப் போகும் மிஸ்டர் காந்தி! இவரை நீங்கள் நடத்தும் முறை மிக அழகா யிருக்கிறது!" என்றார்.



கூடுதலான பாதுகாப்பு அளிக்க கம் - டிப்பிடு



உங்களுக்குக் கூடுதலான பாதுகாப்பு வேண்டுமானால் பயர்ஸ்டோன் கம்-டிப்பிடு டயர்களையே கோருங்கள்.

இந்த பிரத்தியேகமான கம் - டிப்பிங் முறை கூடுதலான விலையின்றி டயருக்குப் போதிய பாதுகாப்புடன் அதிக மைல்கள் ஓட நல்ல வலுவை அளிக்கிறது.

Firestone

பயர்ஸ்டோன்

பயர்ஸ்டோன் டயர் & ரப்பர் கம்பெனி ஆப் இந்தியா, லிமிடெட்

பம்பாய் ★ மதராஸ் ★ கல்கத்தா ★ பெங்களூர் ★ நாகப்பூர்
லாகூர் ★ டெல்லி ★ கராச்சி ★ கொழும்பு ★ லக்னோ

ஒத்தெல்லோ

கார்பன் பேபர்



வேறெந்த ரகத்தையும் விட மிக உயர்ந்த பென்ஸில் கார்பன். பூல்ஸ்காப் சைஸ். ஒரு புறம் நீல வர்ணம். மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

•

ads.129.

விவரங்களுக்கு:

வி. பெருமாள் செட்டி & ஸன்ஸ்

... 5, ஸ்டிரிங்கர்ஸ் ... தெரு ... மதராஸ் ....

பேய் மனம்

ஸி. ஆர். ராமஸ்வாமி

மயிலாப்பூரில் ஒரு பங்களா. தோட்டத்தில் ரோஜா, மல்லி, மனோரஞ்சிதம் முதலிய பூக்களின் வாசனை காற்றில் கலந்து பரவிக் கொண்டிருந்தது. குரோட்டன் செடிகளின் இலைகள் பல நிறங்களைக் காட்டிப் பூக்களுடன் போட்டியிட்டன.

மெத்தையில் ஓர் அறையில் ஹேமா இருமல் உபத்திரவத்துடன் படுத்துக் கொண்டிருந்தாள். முதலில் அவளுடைய கணவன் ராமச்சந்திரன் "அது ஒன்றுமில்லை, மார்ச் சளி; சில வாரங்களில் சரியாய்ப் போய்விடும்" என்று தைரியம் சொல்லி வந்தான். சில நாட்களுக்குப் பின் க்ஷயரோகம் தீவிர சொரூபத்தை யெடுக்கவே மனைவிக்கு உண்மையைச் சொல்லி ஆறுதல் சொல்லவேண்டியிருந்தது.

* * *

"உடம்பில் நோய் பற்றிக் கொண்டால் அதனுள் சிறைப்பட்ட உள்ளமும் கெட்டுப்போக வேண்டுமா?" என்று தன்னையே நொந்து கொண்டு வருந்தினள் ஹேமா.

"வாடின புஷ்பம்போல, அழுகின பழம்போல, கெட்டுப் போனேனா?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு அவள் தன் மனோவிகாரத்தைப் பற்றி வருந்தி வாழ்க்கையில் வெறுப்புற்றாள்.

ஐந்து வருஷங்களுக்கு முன் கணவனுடன் மன்றாடித் தாய் தகப்பனை யிழந்த திக்கற்ற தன் தங்கை பிரேமாவைத் தன்னுடனிருந்து படிக்கட்டுமென்று எவ்வளவு ஆசையுடன் வரவழைத்துக் கொண்டாள்? அவள் தன் கணவனுடன் கூச்சமில்லாமல் சரசமாய்ப் பேசி, அவளால் வீடு எப்பொழுதும் கலகலப்பா யிருந்ததைக் கண்டு எவ்வளவு பெருமையடைந்திருந்தாள்! லக்ஷ்மி சொல்வதெல்லாம் உண்மையா யிருக்குமா? அல்லது மேகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் அவை நமக்குத் தோன்றும் உருவங்களை யெல்லாம் எடுத்துக் கொள்வதுபோல் மனப் போக்கின்படி எல்லாம் நானே கற்பனை செய்து கொள்வதுதானோ என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

* * *

ஹேமாவின் உள்ளத்தில் இந்த விஷமேற்றிக் கெடுத்தது வேறு யாருமில்லை, வேலைக்காரி லக்ஷ்மிதான். பிரேமாவின் கண்டிப்பு லக்ஷ்மிக்குப் பொறுக்கவில்லை. லக்ஷ்மியின் சோம்பேறித்தனமும் பிரேமாவுக்குப் பிடிக்கவில்லை. அடிக்கடி சாமான்கள் திருட்டுப் போவதைக் கண்டு பிரேமா அவளை வேலையிலிருந்து நிறுத்திவிட அத்திம்பேரிடம் சொன்னதைக் கேட்டு அவள் சகோதரிகளிடையே சண்டை மூட்டத் தீர்மானித்தாள்.

தமக்கைக்குச் சிசுருஷை செய்வதில் பிரேமாவும் நோயில் விழாமலிருப்பதற்காகச் சிலசமயம் அவளை ராமச்சந்திரன் வெளியில் உலாவ அழைத்துப் போவான். லக்ஷ்மி அதற்குத் தன் சங்கற்பத்திற்குச் சாதகமான வர்ணத்தைத் தீட்டி ஹேமாவினிடம் விஸ்தரித்தாள். பிரேமாவிற்குப் பட்டுப் புடவைகள் வாங்கித் தந்ததை அவள் மனம் நோகும்படி விஸ்தரித்தாள். பிரேமாவும் ராமச்சந்திரனும் கதவைச் சாத்திக் கொண்டு ரகசியமாகப் பேசுவதைத் தான் பார்த்ததாகச் சாதித்தாள். வாஸ்தவத்தில் ராமச்சந்திரன் பிரேமாவுடன் ஹேமாவின் உடல் நிலையைப் பற்றி ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்திருப்பான். அல்லது அவளுக்கு பி. ஏ. பரீக்ஷை பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பான். இதையெல்லாம் லக்ஷ்மி உபயோகப்படுத்திக் கொண்டாள்.

எல்லாருக்கும் கெட்ட சிந்தனைகள் தோன்றுவதுண்டு. அதைச் சிலர் அடக்கிக் கொள்ளுகிறார்கள். அப்படிக் கெட்ட சிந்தனை தோன்றுகிறவர்களை யெல்லாம் கொடியவர்களென்று சொல்லிவிட முடியுமா? ஹேமாவுக்கு லக்ஷ்மி சொல்லும் கதைகளைக் கேட்டுத் தன் தங்கைமேல் துவேஷம் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. அவளுக்குச் சிறு வயது முதற் கொண்டு தூங்கும்பொழுது எழுந்து நடமாடும் வழக்கமுண்டு. இந்த மாதிரி சிந்தித்துக் கொண்டு தூங்குகையில் ஒரு நாள் அவள் மனதில் என்ன தோன்றிற்றோ, பாவம்! டாக்டர் தனக்குக் கொடுத்த தூக்க மாத்திரைகள் மூன்றை யெடுத்துப் பிரேமாவின் படுக்கை யறைக்குச் சென்று அவளுடைய பாலில் போட்டு விட்டாள். பிரேமா இரவில் வயிறு வலித்தால் கொஞ்சம் பாலில் மருந்து போட்டுச் சாப்பிடுவதுண்டு.

இரவில் ஹேமா தான் நரகத்தில் இருப்பதாகவும், யம கிங்கரர்கள்

அவளைத் திட்டியும் அதட்டியும் வாயிலை சயத்தைக் காய்ச்சிக் கொட்டுவதாகவும் தப்பி ஓட முடியாமல் தவிப்பதாகவும் கனவு கண்டு எழுந்திருந்தாள். காலையில் அவள் மிரண்ட பார்வையைக் கண்டு வழக்கம் போல் விசாரிக்க வந்த ராமச்சந்திரன் "என்ன உடம்பு? ஏதாவது கனவு கண்டாயா?" என்று கேட்டான். அவள் "ஐயோ! நான் எப்படியாவது போகிறேன், பிரேமாவைப் போய்ப் பாருங்கள்" என்றாள்.

"அவளைப் பார்ப்பதற்கு என்ன அவசரம்? அவள் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருப்பாள்" என்றான் ராமச்சந்திரன்.

ஹேமா, "அது தூக்கமில்லை, நான் நேற்று ராத்திரி பெரிய பாவம் செய்து விட்டேன். அவள் பாலில் எனக்குத் தூக்கத்திற்காகக் கொடுத்த மூன்று மாத்திரைகளையும் போட்டுவிட்டேன்" என்று சொல்லி அழ ஆரம்பித்தாள்.

ராமச்சந்திரன், பலமாய்ச் சிரித்துவிட்டு, "அவ்வளவுதானே! அந்த மாத்திரை ஒன்றும் செய்யாது. அவை சர்க்கரை மாத்திரைகள். டாக்டர்கள் அவற்றைத் தூக்கத்துக்கு மருந்தென்று பொய் சொல்லிக் கொடுப்பதுண்டு" என்று சொன்னான்.

பிறகு வருத்தத்துடன், "அதை அவளுக்கு எதற்காகக் கொடுத்தாய்?" என்று கேட்டான். ஹேமா தன் இதயத்தைக் கணவன் முன் திறந்து காட்டினாள்.

ராமச்சந்திரன், "இதற்காக நீ விசனப்படவேண்டாம். கோர்ட்டில்கூடத் தூக்கத்தில் செய்வதைக் குற்றமாகக் கருதுவதில்லை. மேலும் நாம் நல்லவர்களென்று இறுமாப்புக் கொண்டிருக்கும் பொழுது நமது கர்வத்தை அடக்கும் பொருட்டும் நமது தீய எண்ணங்கள் அறவே ஒழியவேண்டுமென்றும் தெய்வம் செய்யும் ஏற்பாடு இது" என்று சமாதானம் கூறினான்.

* * *

லக்ஷ்மி வேலையிலிருந்து நீக்கப்பட்டாள். ராமச்சந்திரன் மனைவியைப் பெருந்துறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே ஹேமாவிற்கு உடம்பு சிறிது சிறிதாகக் குணமடைந்தது.

பிரேமாவுக்குக் கல்யாணமாகி இப்போது இரண்டு குழந்தைகள் அவளுக்கு இருக்கின்றன. ஹேமா அந்தக் குழந்தைகளைத் தன் குழந்தைகளாகவே பாவித்து வருவதில் என்ன வியப்பு?

காலக்ஷேபம்

நட்பு விஷயம்!

"நான் கீழ்த்தரமானவர்களுடனெல்லாம் சிநேகம் பண்ணும் வழக்கமே வைத்துக் கொள்வதில்லை. உம்முடைய அபிப்பிராயமென்ன?"

"நானும் அப்படித்தான்: இருந்தாலும் உம்முடைய விஷயத்திலெல்லாம் அந்தளவு கண்டிப்பாக இருக்க முடிகிறதா!"

ஆட்சேபணை எதற்கு?

"ஒரு கப் காப்பி சாப்பிடுவதில் உனக்கு ஏதாவது ஆக்ஷேபணை உண்டா!"

"இந்த ஜன்மத்திலே அந்த வழக்கம் கிடையாது."

"என்ன! காப்பி சாப்பிடுவது இல்லையா?"

"அதைச் சொல்லவில்லை, ஸார்! காப்பி சாப்பிடுகிறாயா என்று கேட்டால் ஆட்சேபணை சொல்லும் வழக்கம் என்னிடம் கிடையாது என்றுதான் சொன்னேன்!"

புத்திசாலி மனைவி

புருஷன்:—சர்க்கரை டின் மீது எதற்கு 'கடுகு' என்று எழுதி ஒட்டியிருக்கே?

மனைவி:—இந்த சர்க்கரைப் பஞ்சத்திலே 'சர்க்கரை' என்று நிஜத்தை எழுதி ஒட்டினால் எறும்பு வந்து தின்றுவிட்டுப் போய் விடப் போகிறதே என்று மாற்றி எழுதி வைத்திருக்கிறேன்.

சமர்த்துக் குழந்தை!

குழந்தை:—அம்மா! அப்பாவை நீ ஏன் கலியாணம் பண்ணிக் கொண்டாய்?

அம்மா:—அடி என் சமர்த்தே! உனக்கிருக்கிற முன் யோசனையும் புத்திசாலித் தனமும் எனக்கு அப்போது இல்லாமல் போச்சே!

அது முடியும்!

"இந்தச் சென்னைப் பட்டணத்தில் பணமில்லாதவன் பாடு கஷ்டம்தான்: ஒன்றுமே வாங்க முடியாது!"

"அப்படியா? கடன் கூடவா வாங்க முடியாது!"

பேஷான நடிகர்

" தூன் "

" **பா**ட்டி, எனக்கு என்னமோ மார்பை ஒரே வலியாக வலிக்கிறதே !" என்றான் நாகராஜன். அப்பொழுது இரவு மணி பதினொன்று இருக்கும்.

" உஷ்ணத்தால் வலிக்கும்; கொஞ்சம் விளக்கெண்ணெய் தடவி விடட்டுமா ?" என்று கேட்டுக் கொண்டே, எழுந்திருந்து மின்சார விளக்கைப் போட்டாள் பாட்டி.

" பாட்டி, இந்த வலி விளக்கெண்ணெய்க் கெல்லாம் போகாது. இருதயத்தில் ஏதோ கோளாறு இருக்கும்போல் இருக்கிறது. பேச முடியவில்லை...... ஹாம் ..... ஹாம்......" என்று முனகிக் கொண்டே நாகராஜன் படுக்கையில் நிலை கொள்ளாமல் புரண்டான்.

" என்னடாப்பா, இந்த நடு ராத்திரியிலே என்ன பண்ணறது ?" என்றாள் பாட்டி கவலையுடன்.

" பொறுக்க முடியவில்லையே !" என்று மேலும் அலறினான் நாகராஜன்.

" அப்பாவுக்குத் தந்தி கொடுக்கட்டுமா ?" என்று கேட்டுக் கொண்டே பாட்டி பேரன் தலையை அமுக்கினாள்.

"அப்பா வரமட்டும் தாங்காது, பாட்டி !"

" கொஞ்சம் பொறுத்துக் கொள். இதோ, எதிர் வீட்டு டாக்டர் கமலத்தை அழைச்சிண்டு வரேன் !" என்று சொல்லி விட்டுப் பாட்டி கிளம்பினாள்.

" பாட்டி ! பொம்மனாட்டி டாக்டர் எனக்கு என்னத்துக்கு ? மார்பு வலிக்கு அவள் என்ன செய்வாள் ?"

" அவளும்தான் ரப்பரைக் கழுத்தில் தொங்கப் போட்டுண்டு தினம் போயிட்டு வராளே ! பொம்மனாட்டின்னா பரீக்ஷை பாஸ் பண்ணிக்கூட ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லிவிடறதா ? அவளும் புருஷ டாக்டர் படிச்சதைத்தானே படிச்சிருக்கா ?"

" என்ன இருந்தாலும் அவளுக்கு அனுபவம் போதாது !"

" நன்னா சொன்னேடா ! அனுபோகம் உள்ளவாதான் மேலெழுந்த வாரியா பார்ப்பா ! கத்துக் குட்டிகள் தங்களுக்குப் பேர் வரணும்னு நன்னா கவனிச்சு உடம்பைப் பார்ப்பா !"

" வேண்டாமே, பாட்டி !" என்று கெஞ்சினான் நாகராஜன்.

" தத்துப் பித்துன்னு தடுக்காதே ! இந்த இருட்டிலே வேறே எந்த டாக்டரை நான் தேடப் போறது ?" என்று சொல்லிக் கொண்டே பாட்டி வாசல் கதவைத் திறந்து கொண்டு எதிரிலிருந்த டாக்டர் கமலத்தின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினாள்.

காத்துக் கொண்டே இருந்தவள் போல கமலம் வந்து கதவைத் திறந்தாள்.

" அம்மா, என் பேரன் நாகத்துக்குத் திடீர்ன்னு மார்பு வலின்னு துடிக்கிறான். நீதான் சற்று வந்து பாரேன் !"

" நாகம் யாரு, உங்க பேத்தியா ?"

" இல்லேம்மா, எதிர்த்த வீட்டிலே வக்கீலா யிருக்கிறானே, அவன் !"

" காலையில் பார்த்துக் கொள்ளக் கூடாதா ?"

" இல்லேடியம்மா, துடியாய்த் துடிக்கிறான் ! உனக்குக் கோடி புண்ணியமுண்டு. நீதான் அவன் வியாதியைப் போக்கணும்."

" வேறே உங்காத்திலே புருஷா ஒத்தருமில்லையா, பாட்டி ?"

" இல்லேடி அம்மா, நானும் அவனும் தான் !"

" சரி, சித்த இருங்கோ ! அப்பாவை எழுப்பிச் சொல்லிவிட்டு வருகிறேன் !"

கமலம் உள்ளே போய்க் கைப் பெட்டியையும் 'ஸ்டெதாஸ் கோப்'பையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

" ஐயோ, அப்பா, டாக்டர் வந்துட்டாரா ?" என்று கதறினான் நாகராஜன்.

" இதோ, வந்து விட்டாள் !" என்றாள் பாட்டி.

" பாட்டி, அந்தப் போர்வையை எடுத்துடுங்கோ !" என்றாள் கமலம்.

பாட்டி போர்வையை நகர்த்தினாள். கமலா மார்புக் கூட்டைப் பரிசீலனை செய்து பார்த்தாள்.

" பாட்டி, அவரை நாக்கை நீட்டச் சொல்லுங்கோ !"

" நாகம் ! நாக்கை நீட்டப்பா !" என்றாள் பாட்டி.

" பேருக்கு ஏத்தாப்பலே நாக்கு நீளமாத்தான் இருக்கு !" என்று சொல்லிக் கொண்டே நாக்கைக் கவனித்தாள் கமலா.

"பாட்டி, நாக்கை உள்ளே இழுத்துக் கொள்ளச் சொல்லுங்கள்!"

"நாகம், நாக்கை இழுத்துக்கோ!"

நாகராஜன் நாக்கை இழுத்துக் கொண்டான்.

"பாட்டி, கண் இமை இரண்டையும் காட்டச் சொல்லுங்கோ, நான் அவரைத் தொடமாட்டேன்!"

"அதனால் என்ன அம்மா, தொழிலுக்குப பாவம் உண்டா?"

"இல்லை பாட்டி, நீங்களே காட்டுங்கள்."

பாட்டி நாகராஜன் கண்களைப் பிரித்துக் காட்டினாள்.

"சரி, பாட்டி! பதினைந்து ரூபாய் ஆகும்—மருந்து, பீஸ் உள்பட. நான் புருஷாளுக்கு வைத்தியம் பண்றது இல்லே. அதுவும் ராத்திரியில் போகிற வழக்கமே கிடையாது!" என்றாள் கமலம்.

நாகராஜன் வலியைப் பொறுத்துக் கொள்ளும பாவனையாக உதட்டைக் கடித்துக் கொண்டு வந்த சிரிப்பை வெகு கஷ்டப்பட்டு அடக்கினான்.

பாட்டி இடுப்பில் செருகி யிருந்த பதினைந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தாள். கமலாவும் அதைப் பெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்று தானே மருந்தையும் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள்.

மறுநாள் நாகராஜன் தகப்பனார் நாகேஸ்வர அய்யருக்குத் தந்தி அடிக்கப் பட்டது. அவரும் கும்பகோணத்தி லிருந்து வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடி வந்தார். நாகராஜன் படுக்கையில்தான் இருந்தான். சற்றுக் குணம் தெரிவதாகச் சொன்னான். மறு நாளும் கமலா கட்டை விரலை நோக்கியபடி உள்ளே வந்து நாகராஜன் உடம்பைப் பார்த்து, மருந்து எழுதிக் கொடுத்து விட்டுப் போனாள்.

"நாகேஸ்வரா, இந்தப் பெண் என்ன பதவிசு, போ! அவளோடே பேசக்கூட மாட்டேன்னுடுத்து, பாரு! அவனை நாக்கை நீட்ட, கண்ணைத் திறக்க எல்லாம் என் மூலமாகத்தான் பேசினாள், சீதை துரும்பைப் போட்டு ராவணனோடே பேசினாப் போலே! இத்தனை படிச்சதுக்கு இவ்வளவு சம்பாதிக்கிறதுக்குக் கர்வம், ராங்கி ஒன்று கிடையாது. குணம்னா இப்படின்னா இருக்கணும்? என்ன கைராசி? போய்க் கூப்பிட்டேன் நடு நிசியிலே, உடனே வந்து ஒரு வேளை மருந்துதான் கொடுத்தாள் மகராசி, வியாதி பொட்டுன்னு நின்று போயிடுத்து!" என்று பாட்டி அடுக்கிக் கொண்டே போனாள்.

பாட்டிகள் புகழ்ந்தால் ஒரேயடியாய்ப் புகழ்வார்கள்; இகழ்ந்தால் ஒரேயடியாய் இகழ்வார்கள்!

நாகரிகம் என்றாலே பிடிக்காத தன் அம்மா, ஒரு படித்த பெண்ணை, அதிலும் டாக்டராய் இருப்பவளை இப்படி உயர்த்திப் பேசுவது, நாகேஸ்வர அய்யருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

இரண்டு நாள் கழித்து டாக்டர் கமலத்திற்குப் பீஸ் கொடுக்கப்போன நாகேஸ்வர அய்யர், கையில் ஜாதகத்துடன் அம்மாவிடம் வந்தார்.

"அம்மா, டாக்டர் கமலம் இன்னும் கல்யாணம் செய்து கொள்ள வில்லையாம். பீஸ் கொடுக்கப் போனபோது அவள் அப்பா இருந்தார். பூர்வோத்திரங்கள் விசாரித்ததில் அவர் கிட்டவே வந்துட்டார். நம் அத்தான் ராமசேஷனுக்குச் சம்மந்தி உறவாம். ஜாதகத்தைப் பார்த்தேன்; ஒத்து இருக்கு!" என்றார் நாகேஸ்வர அய்யர்.

"அந்தப் பெண் நம் வீட்டுக்கு வரக் கொடுத்து வைக்கணுமே?" என்றாள் பாட்டி.

"வயசான பெண்; படித்த பெண், உனக்குப் பிடிக்குமா?"

"இந்தக் காலத்தில் அதெல்லாம் பார்க்க முடியுமா? வயசானால் என்ன? படிச்சா அவளும் சம்பாதிக்கிறாள், இவனும் சம்பாதிக்கிறான்! வீட்டிலே வேலைக்காரி போட்டுண்டு காரியம் நடக்கட்டுமே! எனக்குப் பெண் ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்றாள் பாட்டி, ருத்திராக்ஷத்தை உருட்டிக் கொண்டே.

"உனக்குப் பிடித்தால் சரிதான்!" என்றார் நாகேஸ்வர அய்யர்.

கல்யாணம் ஆன பிறகு குளிர்ந்த சந்திரிகையில் வக்கீல் நாகராஜனும், டாக்டர் கமலாவும் உல்லாசமாகத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தனர்.

"பலே, கமலா! நல்ல யோசனை செய்தாய்! இல்லா விட்டால் இந்தப் பத்தாம் பசலிகள் படித்த பெண் பதவிசு இல்லை என்று நம்மைக் கல்யாணமே பண்ணிக் கொள்ள விட்டிருக்காதுகள்!" என்றான் நாகராஜன்.

"நீங்கள் வக்கீல் தொழில் செய்வதை விட நாடகத்தில் வேஷம் போட்டு நடிக்கலாம். அன்று என்னமாய் நடித்தீர்கள்? நானே நிஜமாகப் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்து விடுமோ என்று பயந்து போனேன்!" என்றாள் கமலா.

படித்துப் பார்!

பிள்ளைமொழி

[ஆசிரியர்: ஸ்ரீமதி பாக்கியசங்கர்; பிரசுரம்: இந்தியன் விடேசர்ச் சொஸைட்டி, சென்னை: விலை: ரூ. 1.]

குழந்தைகள் சப்பாணி கொட்டுவதும், தவழ்ந்து வருவதும், தத்தக்கா புத்தக்கா என்று நடப்பதும் எவ்வளவோ அநுபவிக்க வேண்டிய காட்சிகள்! இதையெல்லாம் நம் முன்னோர் அநுபவித்துக் குழந்தைகளை முருகனாகப் பாவித்து அருமையான பாடல்கள் பாடினார்கள். அத்தகைய பாடல்களுக்குப் பிள்ளைத் தமிழ் என்று பெயர்.

குழந்தைகளின் விளையாட்டுகள் எப்படி எனமானவையோ அப்படியே அவற்றின் உணர்ச்சிகளும் அநுபவிக்க வேண்டியவை.

ஊதற்காரன் தெருவில் வந்துவிட்டான் என்றால் அவன் கையிலுள்ள சாமான்கள் அவ்வளவும் வீட்டுக்குள் இறக்குமதி செய்து விடவேண்டும் என்று ஆத்திரப்பட்டு,

அம்மா! அம்மா! ஓடி வா!
ஊதற் காரன் பாரம்மா!

என்று குழந்தைகள் கூப்பிடுகின்றன!

குழந்தைகளின் கண்ணுக்குப் பல்லி நல்லதாக ஓடுவதாகத் தோன்றுகிறது. "ஐயோ! பாவம்!" என்று குழந்தைகள் இரங்குகின்றன.

"காக்கை கருப்பாக இருக்கிறதே, அதைப் பார்த்து எல்லாரும் கேலி செய்ய மாட்டார்களா?" என்று குழந்தை உள்ளம் வருத்தப்படுகிறது!

இப்படிப்பட்ட பல குழந்தை உணர்ச்சிகளை நல்ல அழகான பாடல்களாக ஸ்ரீமதி பாக்கியசங்கர் எழுதியிருக்கிறார்.

குழந்தை மனப்பான்மையை நன்கு அறிந்து குழந்தைகளுக்காகவே எளிய அழகான தமிழில் எழுதி யிருக்கிறார்.

இந்தப் புத்தகத்தை ஒரு குழந்தையின் கையில் கொடுத்தால், பாட புத்தகத்தைப் பார்த்து முகம் சிணுங்குவது போல் சிணுங்காது; குதூகலமாகக் கூத்தாடும்.

ஆங்கில பாஷையில் இம்மாதிரி குழந்தைகளுக்கான பாட்டுப் புத்தகங்கள் ஆயிரக் கணக்கிலே இருக்கின்றன. ஆங்கிலக் குழந்தைகள் அதிர்ஷ்டம் செய்த குழந்தைகள் தான். நமது தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கு அம்மாதிரியான அதிர்ஷ்டம் இப்போதுதான், இந்தப் புத்தகத்தின் மூலமாகப் பிறந்திருக்கிறது என்று சொல்லவேண்டும்.

உணவுப் பஞ்சம்

[ஆசிரியர்: மு. அருணாசலம்; பிரசுரம்: சக்தி காரியாலயம்; விலை: ரூ. 1—8—0.]

"படிப்பது திருவாசகம்; இடிப்பது சிவன் கோயில்" என்பதற்கு ஏற்ப நாட்டில் உணவுப் பஞ்சம், பட்டினிச் சாவு என்றெல்லாம் சொல்லிக்கொண்டே நமது சர்க்கார் பஞ்சத்தைக் கொண்டு வந்து விட்டு விட்டனர் என்பதை ஆசிரியர் நன்றாக விளக்குகிறார்!

1945 நவம்பர் முடிய 63,000 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது என்ற விவரத்தைப் பார்க்கும்போது நமக்குத் தூக்கி வாரிப் போடுகிறது: மடிந்துபோன கோதுமையை அண்ணாமீனை, வங்காளத்திலே ஆற்றில் கொண்டு போய்க் கொட்டினார்களாம். சோற்றுக்குக் கிடைக்காத ஏழை மக்கள் அதையேனும் பொறுக்கி உண்ணலாம் என்றெண்ணி அதை யெடுக்க ஆற்றங்கரைக்கு ஓடினார்களாம். வயிற்றுக் கில்லாமல் மடிந்துபோன அந்தக் கோதுமையைத் தின்றால் நோய் உண்டாகிவிடும், நோய் உண்டாகி அவர்கள் இறப்பது விரும்பத் தக்கதல்ல என்று கருதிய கருணை மிக்க அதிகாரிகள் தடியடிப் பிரயோகம் செய்து, ஆற்றங்கரைக்கு ஓடின மக்களைக் கலைத்தார்களாம்!

இப்படி யெல்லாம் பஞ்சத்தை உண்டாக்கியவர்கள், பஞ்சத்தைப் போக்க வேண்டும் என்று 'ஓ' வென இரைகிறார்கள்! பஞ்சத்தைப் போக்கக் கூடியவனான விவசாயிக்கு ஒருவித நன்மையும் செய்வது கிடையாது.

உணவுப்பஞ்சத்தை நிவர்த்திக்க அரசாங்கத்தாரை மட்டும் நம்பி விருந்துவிட முடியாது என்று கூறி, ஒவ்வொருவரும் தங்களால் ஆனதைச் செய்யப் பல வழிகளும், உபாயங்களும் சொல்லுகிறார் ஆசிரியர்.

பாரத சக்தி

[ஆசிரியர்: அ. பாலசுப்பிரமணியன், 47 ரங்கப் பிள்ளை வீதி, புதுச்சேரி; விலை: தனிப் பிரதி அணா 8.]

கவிதையும் கட்டுரையும் கலந்து மணம் வீச "பாரத சக்தி" புதுவையில் உதயமாகியிருக்கிறது. தமிழ் வளர்க்கும் கட்டுரைகளும் அறிவை வளர்க்கும் கட்டுரைகளும் புது மணம் கமழும் சமூக சித்திரங்களும் சேர்ந்து இம்மாத மலருக்கு ஒரு விசேஷ வனப்பை யளிக்கின்றன.

மகரிஷி வ. வெ. சு. ஐயரும் மகாகவி பாரதியாரும் புதுவை நகரையே தாங்கள் தமிழ்த் தொண்டாற்றும் இடமாகக் கொண்டனர். இன்று அதே புதுவையில் யோகி சுத்தானந்த பாரதியின் ஆசியுடன் ஆரம்பமாகி யிருக்கும் "பாரத சக்தி"யும் தமிழ் இலக்கிய உலகில் ஒரு புது சக்தியைப் பரப்புமாக.

வரவேற்கிறோம்!

ஸ்ரீ வரலக்ஷ்மி தேவியின் திருவுருவமும் ஸ்ரீ காமாக்ஷிதேவியின் தெய்விக வடிவமும் அழகிய மூவர்ணத்தில் மழ மழப்பான ஆர்ட் தாளில் அச்சிட்ட சித்திரப் படங்கள் கிடைக்கப் பெற்றோம். பூஜைக்கு உகந்த இப்படங்களின் விலை பிரதி ஒன்றுக்கு அணா 8.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வரலக்ஷ்மி படப் பிரசுராலயம்,
37, நடுத்தெரு, மயிலாப்பூர், சென்னை

துளசி மடம்

எஸ்.வி.எஸ்.

நான் துளசி மடத்தைப் பார்த்
ன். "என் உள்ளத்தைப் போலவே
ந்தத் துளசிச் செடியும் உலர்ந்து
கிறது" என்று எண்ணினேன்.

அடுத்தகணமே "அவள் இங்கு இல்லாத
ாது இந்தத் துளசிச் செடி, காய்ந்து
ர்ந்து குச்சி குச்சியாக நிற்பதில்
ன ஆச்சரியமிருக்கிறது! என் உள்ளம்
ர்ந்திருப்பதிலும் எவ்வித வியப்பு
ல்லை" என்று எண்ணிக் கொண்டேன்.

ஆனால் என் மனசு, அவளையும் அந்தத்
ளசி மடத்தையும் தவிர்த்து வேறு
தைப் பற்றியும் நினைக்க மறந்து
ட்டது.

*　*　*

அன்றைக்கு, "அடி சரளி, சற்று
தப் பக்கம் வந்து 'ஏன்?' என்று
ட்டு விட்டுப் போயேன்" என்று
ன்றினேன். அவள் மறுத்து விட்டாள்.

ஆனால் சற்று நேரங் கழித்துத் துளசி
த்துக்குத் தண்ணீர் தெளிப்பதாக
து என்னுடனும் சற்றுப் பேசினள்.

ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷத்தான்
ஆனுடன் அப்படிப் பேசியிருப்பாள்.
க்குள் புறப்பட்டு விட்டாள்!
இன்னும் இரண்டு நிமிஷம் இருந்து
ட்டுப் போகப் படாதா?" என்றேன்.

சரிதான்! பெரியவா பார்த்தால்
ன நினைச்சுக்குவா!" என்று சொல்லி
ட்டுப் போய் விட்டாள்!

ஆனால் ஓரே அடியாக என் அறையை
டிப் பார்க்காமலும் அவள்
க்கவில்லை!

கோலம் போடப் போவதாக பாவனை
ய்து கொண்டு வாசல் முற்றத்திலுள்ள
ளசி மடத்துக்குப்
ாவதற்காக என்
றைக்குள் நுழைந்தாள்!
ண்டு நிமிஷம் என்
யைக் கிண்டி விட்டுப்
ாய் விட்டாள்!

ஏன் என்னை இப்படிப்
த்துகிறாய்! ஒன்று



என் அறைக்குள் வராமலேயிருந்து விடு. இல்லை; வந்தால் பத்து நிமிஷம் பேசும் படி அவகாசப் படுத்திக் கொண்டு வா" என்றேன்!

ஒருதரம் என்னை முறைத்துப் பார்த்து விட்டுப் போனள்.

சரி, கோபித்துக் கொண்டு விட்டாள்; இனிமேல் என் அறைக்குள் வரமாட்டாள் என்று, நான் எழுதுகிறதோ படிக்கிறதோ செய்யலாம் என்று ஆரம்பித்தேன். மறுபடியும் அவள் வந்து நின்றாள்!

"எங்கே வந்தாய்?" என்றேன். "இல்லை; அவ்வளவு கோபித்துக் கொண்டு சொன்னீர்களே! அந்தக் கோபம் எந்த மட்டில் இருக்க என்று பார்ப்போம் என்றுதான் வந்தேன்!" என்றாள்!

"உன்னைக் கோபித்து என்ன பிரயோசனம்!" என்று எனக்குள் சலித்துக் கொண்டேன்!

இப்படி எத்தனை நாள்!

*　*　*

ஆனால் இப்பொழுது என்னை அப்படியெல்லாம் படுத்துவதற்கு யாருமில்லை. அந்தத் துளசி யம்மனைப் படுத்துகிறவர்களும் இல்லை!

அவள் தன் பிறந்தகத்துக்குப் போய் விட்டாள்!

போய் மாசம் மூன்றாகிறது! அவள் வர இன்னும் மாசம் இரண்டு பிடிக்கும். அது வரை எப்படிக் காலத்தை ஓட்டுவது என்று தெரியவில்லை. ஒருவித உபத்திரவமும் இல்லாமல் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை! என்ன செய்கிறது!

இப்படியே இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது!

*　*　*

இம்மாதிரி நினைத்து இரண்டு மாச லீவு எடுத்துக் கொண்டேன்!

லீவு எடுத்துக்கொண்டு மனைவியைப் பார்க்கப்

போனதாக நீங்கள் நினைக்கலாம்! மனைவியை விட்டு, ஊரை விட்டு, வெகு தூரம் வட தேசத்தில் பல ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்யப் போனேன்! சற்று அவளை மறக்க முடிந்தது!



ஒரு நாள் சென்னையில் நல்ல பருவ கால மழை என்ற செய்தி பத்திரிகையில் வந்தது!

எனக்கு இதைப் பார்த்ததும் சொல்ல முடியாத சந்தோஷம் ஏற்பட்டது! நான் நடந்தபோது பூமியில் என் பாதங்கள் பதிந்தாற்போன்ற உணர்ச்சியே இல்லை. ஏதோ ஆகாயத்திலேயே மிதப்பது போலிருந்தது!

காரணம் தெரியாத ஒரு சந்தோஷம் உள்ளம் முழுவதும் பரவி நின்றது. 'ஏன் இன்றைக்குச் சொல்லத் தெரியாத ஒரு ஆனந்தம்?' என்று என்னுள்ளே ஆராய்ந்து பார்த்தேன்! 'மழைக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?' என்று என்னை நானே கேட்டுப் பார்த்தேன்! ஒன்றும் புரியவில்லை!

ஆனால் எனக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்த உல்லாச உணர்ச்சி என்னை இனி எந்த ஊரையும் பார்க்க விடவில்லை!

நேரே என் சொந்த ஊருக்குத் திரும்பினேன்!

மூன்று நாள் பிரயாணம் செய்ய வேண்டும். இரண்டு நாள் ஆகிவிட்டது!

இன்னும் 24 மணி நேரத்தில் வீட்டுக்கு வந்து விடுவேன் என்று நினைத்தபோது உடம்பெல்லாம் புல்லரித்தது!

மேகத்திரையிலிருந்து திடீர் என்று சந்திரன் உதிப்பதுபோல் என் உள்ளத்திலும் ஒரு எண்ணம் உதித்தது.

சென்னையில் நல்ல மழை பெய்திருக்கிறது! நம் வீட்டுத் துளசி மடத்தில் ஒரு துளி தண்ணீருக்கு ஏங்கிக் கொண்டிருந்த துளசிச் செடியும் நன்றாகப் பச்சைப் பசேல் என்று துளிர்த்து நிற்கும்! கண்ணுக்கும் மனசுக்கும் எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கும்!

'ஊரைவிட்டுப் போய் மாசம் இரண்டாகி விட்டது! சரளியும் ஊருக்குப் போனவள் வந்திருப்பாள்! என் வருகைக்காகக் காத்திருப்பாள்! அவளை ரொம்ப நாள் காக்க வைத்து விட்டோமோ! இரண்டு மூன்று நாளுக்கு முன்தான் வந்திருப்பாள்! ஒருவேளை அவ... நாளும் ஒன்றாக வீட்டுக்கு... நுழைகிறோமோ என்னமோ... என்று எண்ணிக் கொண்... வீட்டு வாசலை அடைந்தே... துளசி மடம் கண்ணில் பட்ட... நான் புறப்பட்டுப் போ... போது எப்படி இருந்தே... அதேமாதிரி குச்சியும் க... மாகப் பார்க்கச் சகிக்க... தோற்றம் அளித்தது. அ... பார்த்த உடனேயே என் உற்சா... உவகையெல்லாம் பறந்து ஓடி விட்ட...

அவள் இன்னும் வரவில்லை போலி... கிறது? ஏன், இவ்வளவு அவசரப்பட்... கொண்டு நாம் இங்கு ஓடி வந்தோம்!

'என்ன பைத்தியக்காரத்தனம் செ... விட்டோம்' என்று தீராத மனக் க... புடன் வீட்டுக்குள் நுழைந்தேன்!

என்ன விந்தை! அவளே என்... வரவேற்றாள்! அதே முகமலர்ச்சியோ... அவள் என்னை 'வாருங்கள்' என்றது எ... காதுகளுக்குத் தேனிலும் இனித்தது.

"நீ எப்போது வந்தாய்?" என்... கேட்டேன்.

"நான் வந்து ஒரு வாரம் ஆகிற... உங்களுக்காகக் காத்துக் காத்... போதும் போதும் என்றாகி விட்டது... என்றாள்.

இதைக் கேட்க எனக்கு வருத்தம... இருந்தது. அதை வெளிக்குக் காட்ட... கொள்ளாமல், "எனக்காகக் காத்திரு... தேன் என்கிறாயே; — இந்தத் து... மடத்துக்கு ஜலம் விடுகிறதுதாே... நன்றாகப் பொழுது போகுமே? அ... ஒரு நல்ல வழக்கத்தையும் வி... விட்டாயோ?" என்றேன்.

"ஆமாம், இங்கே என் மனசுக்கு ... சாகத்தை ஊட்டுகிறவா யாருமில்... யாம்! துளசி மடத்துக்கு ஜலம் என்... வேண்டியிருக்கு!" என்றாள்!

* * *

நான் திரும்பி வந்து வா... ஒன்றாகி விட்டது.



துளசிச் செடியும் துளிர்... ஆரம்பித்து விட்டது!

இதோ என்னைப் படுத்... தற்கு அவளும் வந்து விட்ட... என் அறைக்குள்ளே!



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்

மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

விராஜகிசோர் சிரிப்பதைப் பார்த்ததும் மநாதபாபுவுக்கு வெட்கம் உண்டாயிற்று.

“விஷயத்தை முழுவதும் காதிலே ங்கிக் கொள்ளாமலேயே சிரிக்கிறாயே!” றார் அவர்.

“சரி அப்பா, சிரிக்கவில்லை; சொல்லு” றார் விராஜகிசோர்.

“அந்தப் பெண்ணிடம் எனக்கு அன்பு பட்டிருக்கிறது.”

“அன்பா?”

“ஆமாம் நான் அப்படித்தான் நினைக் றேன். ஆனால் இப்பொழுதே அது புதானா? என்பதைச் சொல்லிவிட யாது.”

“சரி! எப்பொழுது விஷயம் இத்தனை ம் முற்றிவிட்டதோ அப்போது நான் ன் அழகா இல்லையா என்று கேட்க ண்டியதே இல்லை, அப்படித்தானே!”

“அதைக் கேட்பானேன்! யாருக்குப் த்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி க்கு அவள் பிடித்திருக்கிறாள்!”

“நியாயம்தானே! — அவளுக்கு என்ன இருக்கும்?”

“பதினாறு—பதினேழு இருக்கும்.”

“என்ன சாதியோ?”

“டாகுர் சாதி! அதை ஏன் கேட்கிறாய், ! பெரிய வேடிக்கை ஒன்று நடந்து டது!”

“என்ன! என்ன!”

“அவளை வேலைக்கு வைத்துக் கொண்ட றைக்கு அப்பாவிடம் ‘அவள் பிராம ள்’ என்று சொல்லி விட்டேன். னால், அவள் ‘டாகுர்’ என்பது அவ ருக்குத் தெரிந்துபோய் உடனே என்னைக் பிட்டு, ‘நீ பிராம்மணள் என்று சொன் ய! அவளை, நான் டாகுர் என்று ல்கிறேனே?’ என்று கேட்டு விட்டார். மென்று விழுங்கிக்கொண்டு, ‘அவள் ‘டாகுர்’தான். நான் தவறிப்போய் சொல்லி விருப்பேன்’ என்று பதில் சொன்னேன்.”

“அப்புறம்?”

“அப்புறம் என்ன? அப்பா நல்லவர் என்பதுதான் உனக்குத் தெரியுமே. பேசாமல் போய்விட்டார்.”

“தேவலையே! இந்த மாதிரி வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறவர்கள் உலகத்திலேயே ரொம்பக் குறைச்சல். இவர் எப்படித்தான் வக்கீல் தொழில் செய்கிறாரோ, தெரியவில்லை. எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது!—அதிருக்கட்டும். நடுவிலேயே நிறுத்தி விட்டாயே. பூராவையும் சொல்லு!” என்றார் விராஜகிசோர்.

“இனிமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது. எல்லாம்தான் சொல்லிவிட்டேனே!”

“நீ அவளைக் காதலிக்கிறாய் என்பது அவளுக்குத் தெரியுமா?”

“அதை நான் எப்படிச் சொல்ல முடியும்? அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பது எனக்குத் தெரியும்.”

“அப்படியா சமாசாரம்!”

“ஆமாம், உண்மையில் அவளுடைய காதல்தான் என்னையும் காதல் கொள்ளும்படி செய்து விட்டது.”

“சரி, இந்த நந்து உன்னிடம் எப்படி வந்து சேர்ந்தாள்?”


“அதையா கேட்கிறாய்! அதுவும் ரொம்ப வேடிக்கை!”

“அப்படியானால் நீ அதைச் சொல்லித்தான் ஆகணும்.”

ராமநாதபாபு ஆரம்பம் முதல் கடைசி வரையில் நடந்ததை நடந்தபடி சொன்னார்.

எல்லாவற்றையும் கேட்டபிறகு, விராஜகிசோர் “உண்மையிலே, ரொம்ப வேடிக்கையாகத்தான் இருக்கிறது! காவல் எல்லாம் தோற்றுவிடும் போலிருக்கிறது” என்றார்.

“எல்லாம் உண்மை! கொஞ்சம்கூடப் பொய்யில்லை. நடந்ததை நடந்தபடியே சொன்னேன்” என்றார் ராமநாதபாபு.



"நீ சொல்வதிலிருந்து, முதன் முதலில் அவனுடைய உள்ளத்தில் தான் காதல் அரும்பி யிருக்கிறது என்று தெரிகிறது."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்."

"அப்படியானால் இந்தக் காதல் வலையி லிருந்து நீ தப்புவது சிரமம்தான்."

"என்ன செய்வது, போ! ஒன்றுமே புரியவில்லை. அவனைக் கல்யாணம் செய்து கொள்வது என்பது முடியாத காரியம் என்றே தோன்றுகிறது. ஆகையால் இந்தக் காதலின் முடிவு என்ன ஆகுமோ தெரிய வில்லை."

"ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்கக் கூடாதா?"

"என் மனம் காதலின் விளைவாகத்தான் அவனை நாடுகிறதா, அல்லது அவனது அழகும் யௌவனமும் அப்படி வசீகரி கின்றனவா என்பது எனக்கு இன்னு சரியாக விளங்கவே இல்லை. அதைச் ச யாகப் புரிந்து கொள்ளாமல் மேல் காரியங் ளுக்கு இப்பொழுதே யோசிப்பானேன்!"

"அப்படியா பேஷ்! இன்னும் உனக் விளங்கவில்லையா? உன் மூளையே மூளை"

"இல்லை, நான் கொண்டிருப்பது காத தான் என்று நினைக்கிறேன். வித்தியாசமா நினைத்துக் கொள்ளாதே! இருந்தாலு நன்றாகத் தெரியும் வரையில்......"

"அது எப்பொழுது தெரியும்?"

"அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெ யாது. அவனை அடியோடு மறப்பதற்கு முய சித்துக் கொண்டிருக்கிறேன் ஆனால்..."



"அந்த விஷயத்தில் வெற்றி கிட்டவில்லையாக்கும்! அது தானே?"

"ஆமாம்!"

"உனக்கு நிச்சயம் வெற்றி கிட்டாது — நான் எழுதி வேண்டுமானாலும் தருகிறேன்."

"ரொம்பக் கஷ்டமாகத் தானிருக்கிறது."

"நல்ல ஆசாமி! அப்பா, நீ! போயும் போயும் பிச்சைக்காரியிடம் காதல் கொண்டாயே!"

"ஆரம்பித்து விட்டாயா, உன்னுடைய அசட்டுப் பேச்சுக்கு! அவன் ஒன்றும் பிச்சைக்காரி இல்லை. மனத்திலும் பிச்சைக்காரியில்லை; பார்வையிலும் பிச்சைக்காரியில்லை. அவன் எப்படித்தான் பிச்சைக்காரக் குடும்பத்தில் பிறந்தானோ, கடவுளுக்குத் தான் தெரியும்."

"நந்து பிறந்தது முதலே பிச்சைக்காரனாக இருந்திருப்பானா என்ன? அவன் இந்தப் பெண் பிறப்பதற்கு முன்பு எப்படியிருந்தானாம்?"

"நான் இதெல்லாம் விசாரிக்கவில்லை"

"நீ ஒரு முட்டாள். இதெல்லாம் விசாரிக்காமல் அவனை எப்படி வேலைக்கு வைத்துக் கொண்டாய்? அவன் பெண்ணிடம் எப்படி மனதைப் பறி கொடுத்தாய்? இதற்கு முன்னால் அவனுடைய நிலைமையைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமோ? பெண்ணின் தாயும் 'டாகுர்' தானோ என்னவோ? இழிச்சாதியாயிருந்தாலும் இருக்கலாம் அல்லவா? பிச்சைக்காரர்களில் இது மாதிரி எவ்வளவோ நடப்பது உண்டு. பெண் அப்படிப் பிறந்திருந்தால்?"

இதைக் கேட்டதும் ராமநாதபாபுவின் முகம் வரண்டு விட்டது. சற்று மௌனமாக இருந்த பின்னர், "நீ ரொம்ப முன்யோசனைக்காரன் அப்பா! உண்மையாகவே சொல்லுகிறேன்: இந்த எண்ணமே எனக்கு அப்பொழுது வரவில்லை."

"'காதலுக்குக் கண்ணில்லை' என்ற பழமொழி உன் விஷயத்தில் எப்படிச் சரியாக இருக்கிறது, பார்த்தாயா? உனக்கென்ன வேண்டும்? பெண்தானே! அவன் சாதியைப் பற்றி உனக்கு என்ன கவலை?"

"அட, அப்படி எல்லாம் சொல்லி விடாதே! நான் இன்னும் அவ்வளவு தூரத்துக்கு வந்துவிடவில்லை."

"இல்லை, அதற்குச் சொல்ல வரவில்லை. இதையெல்லாம், அப்பொழுதே - அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதற்கு முன்பே யோசித்திருக்க வேண்டும்."

"இப்பொழுது கேட்டால் போச்சு! - என்ன குடிமுழுகிப் போய்விட்டது?" என்றார் ராமநாதபாபு.

"சரி, இப்பொழுதே கேட்டு விடு!"

"நீ இருக்கிற பொழுதேயா?"

"ஏன், கேட்டால் என்ன?"

"சொல்லுவானோ என்னவோ?"

"அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கூப்பிடு அவனை. நான் கேட்கிறேன்."

"உன்னிடம் சொல்லவே மாட்டான்."

"நீ கூப்பிடு! நான் கேட்கிற கேள்வியிலே உள்ளதை உள்ளபடி அவன் சொல்லவில்லை என்றால் என்பெயரை எப்படி வேண்டுமானாலும் மாற்றி வை. உன்மாதிரி எல்லாருமே ஒன்றும் தெரியாத முட்டாள்களாக இருப்பார்கள் என்று எண்ணுகிறாயா?"

"சரி, இதோ கூப்பிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு ராமநாதபாபு நந்துவை அழைத்தார்.

7

ராமநாதபாபு கூப்பிட்டதும், நந்து வந்து அவர் முன் நின்றுகொண்டு, "என்ன, எசமான்!" என்று கேட்டான்.

விராஜகிசோர், "ஏன் அப்பா, நீ லக்னோவில் இருந்திருக்கிறாயோ?" என்று கேட்டார்.

நந்து விராஜகிசோரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "இருந்ததில்லை. ஆனால் இரண்டு மூன்று தடவை போயிருக்கிறேன்—ஏன்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. உன்னை எங்கேயோ பார்த்ததுபோல ஞாபகம். ஒருவேளை லக்னோவில் பார்த்திருப்பேனோ என்று எண்ணினேன். நீ அதிகமாக இருந்தது எங்கே?"

"எனக்குச் சொந்த ஊர் அலகாபாத் ஜில்லாவில் இருக்கிறது."

"ஓகோ! அப்படியா? நீ அங்கே என்ன செய்து கொண்டிருந்தாய்?"

நந்துவின் முகத்தில் துயரம் தோய்ந்த ஒரு புன்முறுவல் படர்ந்தது. அவன் தலை குனிந்து கொண்டு, "என்ன செய்தேன் என்று சொல்வது? அதை நினைத்தாலே வருத்தமாக இருக்கிறது" என்றான்.

இதுவரை பேசாமல் உட்கார்ந்திருந்த ராமநாதபாபு, நந்துவின் இந்த வாக்கியங்களைக் கேட்டதும், "நந்து, அந்தக் கால வாழ்க்கையைப் பற்றி நீ என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே!" என்றார்.

"அதைக் கேட்டு என்ன செய்யப் போகிறீர்கள்? துயரம் தரும் விஷயங்களைக் கேட்காமலிருப்பதே நல்லது" என்றான் நந்து.

"அதனால்தான் நீ சொல்லவில்லையா?" என்றார் விராஜகிசோர்.

"ஆமாம். அதைக் கேட்பவர்களுக்கும் வருத்தம் உண்டாகும். சொல்கிறவனுக்கும் வருத்தம் ஏற்படும். அதனால்தான் சொல்லவில்லை. எசமான் கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன்" என்றான் நந்து.

விராஜகிசோர், "சரி, நீ சொல்லு. ஆனால் அதைச் சொல்லுவதில் உனக்கு வருத்தமாயிருந்தால் சிரமப்பட்டுக் கொண்டு சொல்ல வேண்டாம்" என்றார்.

"சொல்லுவது என்றால் மனதை என்னவோதான் செய்கிறது! இருந்தாலும் சொன்னபிறகு மனதிற்கு ஒருவித ஆறுதலும் கிடைக்கத்தான் கிடைக்கிறது" என்றான் நந்து.

"அப்படியானால் அவசியம் சொல்லு. எங்களுக்கும் கேட்கவேண்டும் என்று இருக்கிறது" என்றார் விராஜகிசோர்.

நந்து பக்கத்திலேயே புல் தரையில் உட்கார்ந்து கொண்டு, சிறிது நேரம் தலையைக் குனிந்தவாறு யோசனையில் ஆழ்ந்தான். பிறகு சொல்லலானான் :—

"சுமார் இருபத்தைந்து வருஷத்திற்கு மேல் ஆகிவிட்டது. என் அப்பா ஒரு பெரிய ஜமீன்தாராக இருந்தார். கடவுள் புண்ணியத்தில் எதற்கும் குறைவில்லை. நான் எங்கள் அப்பாவுக்கு ஒரே பிள்ளை. ரொம்பச் செல்வமாக வளர்ந்து வந்தேன். நாட்டுப் புறத்தில் இருந்ததனால் ஒன்றும் அதிகமாகப் படிக்கவில்லை. கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஹிந்தி எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டேன். அவ்வளவுதான். நன்றாகச் சாப்பிடுவது, விளையாடுவது இது தான் என் முக்கியமான வேலை. அந்தக் காலம் எவ்வளவு சுகமாயிருந்தது! ஒரு கவலையோ, சிந்தனையோ கிடையாது.

"அதே கிராமத்தில் எங்கள் ஜாதியைச் ர்ந்த 'டாகுர்' ஒருவர் வசித்துவந்தார். கவும் ஏழை. பயிர்த்தொழில் செய்து ாழ்க்கையை நடத்தி வந்தார். நான் ழந்தைப் பருவத்திலிருந்தே அவருடைய ட்டுக்குப் போய் வருவது உண்டு. அவருக்கு ரு பெண். அவளுடன் நான் விளையாடு வன். எங்களிருவருக்கும் நட்பு வளர்ந்தது.

"குழந்தைகளாக இருந்தபொழுது எங்க க்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் யௌவனப் பருவத்தை அடைந்தபோது ங்கள் இருவரும் ஒருவரைப் பிரிந்து ருவர் உயிர்வாழ முடியாது என்பதைக் ண்டு கொண்டோம். இந்த உணர்ச்சி ழுத்ததும் எங்களிருவருக்கும் கல்யாணம் ய்விட வேண்டுமே என்ற கவலை ழுந்தது. அப்போது என்னுடைய தந்தை ன் கல்யாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க ானார். எனக்கு இவ்விஷயம் தெரிந் தும், ஒருநாள் தைரியத்தை வரவழைத் க் கொண்டு, அப்பாவிடம், 'என் கல்யாணத்தைப் பற்றி வெளியில் பிரஸ்தாபப் படுத்துவானேன்? இந்த வரிசையிலேயே நல்ல இடம் இருக்கிறதே! வெளியிலே இதற்காக அலைவானேன்?' என்று சொன்னேன்.


"என் வார்த்தையைக் கேட்ட அப்பா 'எந்த இடம்?' என்று கேட்டார்.

"'சம்பூரிங்கைத்தான் சொல்கிறேன்' என்று நான் பதில் கூறினேன்.

"அப்பா வெகு முடுக்குடன், 'சம்பூரிங்கா? வீட்டில் சோற்றுக்குத் திண்டாடுகிறானே, என் வயலை உழுது வயிறு வளர்க்கிறானே, என் முன் நின்று பேசக்கூட நடுநடுங்குகிறானே, அந்தச் சம்பூரிங்கை எனக்குச் சம்பந்தியாக்கிக் கொள்வதா? இது ஏழேழு ஜன்மத்திலும் நடக்காத காரியம் என்றார்.

"'அவர் பெண்ணைப்பற்றித்தானே நீங்கள் கவனிக்க வேண்டும்! அவர் பணக்காரரா யிருந்தால் என்ன, ஏழையா யிருந்தால் என்ன?" என்று நான் கூறியதும் அப்பா எரிந்து விழுந்தார். (தொடரும்)

அங்கும் 'க்யூ' வரிசை!



கிடைப்பது சொற்பமேயாகும்போது

—சிறந்தவைகளையே பார்த்து வாங்குங்கள்!

இந்தியாவில் எல்லா மில்லுகளையும் போலவே நாங்களும், சர்க்கார் கட்டுப்பாடுகளனுசரித்து முக்கியாவசியமான துணி ரகங்கள் மட்டுமே தயாரித்து வருகிறோம். எனினும், எங்களது தற்பொழுதைய ட்ரில்கள், ட்வில்கள், கோட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், லாங்கிளாத்து — எல்லாம், பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்ச் சரக்குகளின் நிரந்தர எடுத்துக்காட்டுகளாயிருந்து வந்துள்ள அதே உழைப்புத் தன்மையும், இழை நேர்மையும் வாய்ந்ததுகள்தான்.

உலகிலெங்குமே தலைவிரித்தாடும் இந்த ஜவுளிப் பஞ்சத்தின்போது, கிடைக்கும் சொற்பத் துணிமணிகளைக் கொண்டு இன்னும் பல காலம் சமாளித்து வருவதை விடுத்து நம்மவருக்கும் வேறு கதியோவுமில்லை. இப் பஞ்சகாலத்தில், உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதி கிடைக்க, கீழே காணும் வர்த்தக முத்திரைகளை அறிகுறியாகக் கொண்ட பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்ச் சரக்குகளையே, சாத்தியமாகும்போதெல்லாம் மறவாமல் வாங்குங்கள்.



யுத்தகாலம்

சென்ற ஆறு ஆண்டுகளில் நாங்கள் சர்க்காருக்கு 43,20,00,000 கஜம் துணி சப்ளை செய்திருக்கிறோம். ஆனது, யுத்த காரியங்களுக்காக வுள்ள எங்களது துணி யுற்பத்தி வருடத்தில் 41,000 மைலெனக் காட்டுகிறது. ஏழெட்டு மாதம் கூடுகையிலுள்ள உற்பத்தியானது நம் பூமியை ஒரு தரம் சுற்றிக் கட்டப் போதுமான நீளம் வருமென்றால் பாருங்களேன்!



பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்ஸ்தான் 1900-ல் இந்தியாவில் காக்கித் துணி நெசவை முதன் முதலாக ஆரம்பித்தவர்கள், யுத்தகாலத்திலும் அவர்கள் எப்போதும், ஏராள பொறுப்பை மேற்கொண்டுதான் செய்திருக்கிறார்கள்.

சமாதான காலம்

எங்களது இன்றைய உற்பத்தியளவு மாதம் 60,00,000 கஜங்களுக்கு மேலாகவே வரும். ஆனால் ரயில்ப் போக்குவரவுக் கஷ்டங்களால் வெகு தூர ஸ்தலங்களுக்கு எங்களால் சரக்குகள் தாராளமாக விநியோகிக்க முடியவில்லை.

இரசாயனப் பொருட்களுக்கும் சாயங்களுக்கும் ஏற்பட்டுள்ள பஞ்சம் காரணமாக, யுத்தத்திற்கு முன் ஜனங்களின் மனதைக் கொள்ளை கொண்டிருந்த அனேக ரகங்களும், மற்றும் பற்பல கலர் டிசைன்களும் தயாரிப்பது சாத்தியமாகாமலிருக்கிறது. ஆனால், இந்தத் நிலை தாற்காலிகமென்றே நம்புகிறோம்.

இதற்கிடையே, நாங்கள் ஏராளமாகத் தயாரிக்கும் அவசிய துணி ரகங்கள் உங்கள் உபயோகத்திற்குகந்தவைதான்—நீடித்துழைக்கவும் செய்யும்.


சர்க்கார் கட்டுப்பாடு அமுலுக்கு வருவதற் கெத்தனையோ முன்பு, நாங்கள் விலைகளை மலிவாக்கியே யிருந்தோம். எங்கள் சரக்குகள் கட்டுப்பாடு விலைகளில், உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதியாகவே இன்னும் பெரும்பாலு மிருந்து வருகின்றன.

தி பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்பெனி, லிட்.,

சென்னை

மானேஜிங் ஏஜண்டுகள்: **பின்னி & கோ., (சென்னை) லிட்.**

பூனையின் காற்றாடி



ராஜி

ஒரு பூனை தன் குட்டிகளுடன் காற்றாடி விட்டுக் கொண்டிருந்தது. அந்தக் காற்றாடி வெகு உயரமாகப் பறந்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் கழித்துக் காற்று நிற்கவே அது கீழே இறங்க ஆரம்பித்தது. அதன் பின்னால் ஒரு பெரிய வால் கட்டியிருந்ததால், காற்றாடி கீழே இறங்கும்போது அதன் வால் ஒரு கூரை வீட்டின் மீது மாட்டிக் கொண்டது. அதை எடுக்க பூனை எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. கூரை மிகவும் உயரமாக இருந்தது.

அப்பொழுது, அதிர்ஷ்ட வசமாக அந்தக் கூரை வீட்டுக்குப் பக்கத்தில் ஓர் ஏணி இருந்தது. பூனை சந்தோஷமாக அந்த ஏணியை எடுத்துக் கூரை வீட்டின் மீது வைத்து கூரைமேல் ஏறிற்று. பூனை கூரை மேலே ஏறிய சத்தத்தைக் கேட்டதும், அந்தக் கூரை வீட்டில் வசித்துக் கொண்டிருந்த ஒரு கரடி வெளியே வந்து பூனையைப் பார்த்துக் கோபமாக, "ஏ பூனையே, உனக்கு என்ன கர்வம்! நான் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் என் வீட்டின் மேல் ஏறி ஏதாவது சாமானைத் திருடிக் கொண்டு போகலாம் என்று நினைத்தாயோ?" என்று கேட்டது. பூனை நடுங்கிக் கொண்டே, "கரடியாரே, நான் உங்கள் வீட்டில் திருடுவதற்கு



வரவில்லை. அதோ கூரையில் மாட்டிக் கொண்டிருக்கும் என் காற்றாடியை எடுத்துக் கொண்டு போகவே இங்கு வந்தேன்" என்றது. ஆனால் அந்தப் பொல்லாத கரடியின் கோபம் நீங்கவில்லை. அது பூனையை ஏற இறங்க விழித்துப் பார்த்து, "நீ இப்பொழுதே என் கூரையை விட்டு ஓடிப் போக வேண்டும்" என்று சொல்லி விட்டுக் கூரையில் சாத்தியிருந்த ஏணியையும் கையில் எடுத்துக் கொண்டது. பூனை தப்பினோம் பிழைத்தோம் என்று கூரையிலிருந்து வேகமாக ஓடிற்று.


வெகு தூரம் ஓடிய பிறகு, ஒரு வீட்டுத் திண்ணையில் களைப்படைந்து உட்கார்ந்தது. அந்த வீட்டிலிருந்த ஒரு புலி பூனையைப் பார்த்து, "ஏ, பூனையே! உன்னைத்தான் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நீ ஜனங்களுடன் அதிகமாகப் பழகுகிறாயே; ஒரு காற்றாடி கிடைத்தால் கொண்டு வந்து கொடுக்க மாட்டாயா? என் குழந்தை காற்றாடி வேண்டுமென்று அழுகிறது" என்றது. பூனை சற்று யோசித்தது. கரடியைப் பழி வாங்க ஒரு நல்ல சமயம் கிடைத்தது என்று நினைத்தது. உடனே அது புலியைப் பார்த்து, "புலியாரே! என்னிடம் நல்ல சிகப்

புக் காற்ருடி ஒன்று இருக்கிறது. அதை ஆற்றங்கரைக்குப் பக்கத்தில் வசிக்கும் கரடியின் குடிசை மேலே பத்திரமாக வைத்திருக்கிறேன். நீங்களே நேரில் போய் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றது. உடனே புலி காற்ருடியைக் கொண்டுவருவதற்காகக் கரடியின்வீட்டுக்குப் போய், அங்கே சாத்தியிருந்த ஏணி மேலே ஏறிற்று. புலி ஏணி மேலே ஏறும் சத்தத்தைக் கேட்டதும் கரடி வெளியே வந்து நன்ருய்ப் பாராமல், "ஏ, அற்பப் பூனையே, உனக்கு எத்தனை தடவை சொல்வது? போகிருயா, இல்லையா?" என்றது.

இதைக் கேட்டதும் புலிக்குப் பிரமாத கோபம் உண்டாயிற்று. "இந்த அற்பக் கரடி என்னைப் 'பூனை' என்று கேலி அல்லவா செய்கிறது? கரடியின் கண்ணுக்கு நான் பூனைபோலத் தோன்றுகிறேனுக்கும்! அதன் மேல் பாய்ந்தால்தான் நான் புலி என்பது அதற்குத் தெரியும்!" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டே கரடியின் மேல் வேகமாய்ப் பாய்ந்தது.

கரடி பயந்து நடுங்கி ஒரே ஓட்டமாக வீட்டிற்குள்ளே சென்று, தன் மனைவியை அழைத்து, "அடியே, அந்தப் பூனையை நான் என்னவோ என்று நினைத்தேன் அது பார்த்தால் பூனையாகவும், பாய்ந்தால் புலிபோலவும் அல்லவோ இருக்கிறது!" என்று நடுங்கிக்கொண்டே சொல்லிற்று. இதற்குள், புலி காற்ருடியை எடுத்துக் கொண்டு தன் வீட்டுக்குச் சென்றது. இதையெல்லாம் ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்த பூனை 'மியாவ்' என்று கத்திக்கொண்டே கரடியின் வீட்டுக் கதவோரம் போய் நின்றது. கரடி பயந்து நடுங்கிக் கொண்டே வெளியே வந்து கதவைத் திறந்து "பூனையாரே, மன்னிக்கவும். என் வீட்டில் என் குழந்தைகளுக்காக நான் ஒரு காற்ருடி வைத்திருக்கிறேன். அதையும் நீர் எடுத்துக் கொள்ளலாம். இருந்தாலும் என்மீது நீர் இப்படிப் பாய்ந்திருக்க வேண்டியதில்லை" என்று சொல்லிற்று. பூனை சிரித்துக் கொண்டே காற்ருடியுடன் வீடு திரும்பியது.

ஸ்டுடியோ சம்பவம்




டைரக்டர் :—அட ராமா! இந்த லக்ஷ்மணனுக்குப் புத்தி என்பது கொஞ்சங்கூட இல்லையே? அநுமார் சஞ்சீவிபர்வதம் கொண்டு வருவதற்குள்ளே இவனை யார் எழுந்திருக்கச் சொன்னது?


இப்பொழுது பூராவும்
வெண்மையானது
—ஜாஸ்தி அழுக்குப்படியும்
இடங்கள் உள்பட
ஒவ்வொரு உடையிலும் சீக்கிரம் மலினமாகும் பாகங்கள் உண்டு— அந்த பாகங்களை சொற்பமாக சோப்பைத் தேய்த்து, தண்ணீரில் நனைத்து அடித்துத் துவைப்பதால் அதிகமாகக் கெட்டுப்போகக் கூடினவை.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம்செய்து அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட் சோப்பின் ஏராளமான சுயமாக இயல்கிற நுரையை நனைந்த துணியிடையே புகுத்திக் கசக்கி, பிறகு அலசி சுத்தம் செய்தால், துணி மிக தூய்மையாகவும், வெண்மையாகவு மாகிறது . . . அத்துடன் உங்கள் ஆடைகளுக்கு, இச் சுத்தமான சோப்பைப் பயன்படுத்துவோருடைய இஷ்டபோகமான நோக்கையை யொத்த மிருது தன்மையும் ஏற்படுகிறது. ஸன்லைட் உங்கள் துணிகளுக்கும், அவையின் சாயங்களுக்கும் குணமளிப்பதோடு, உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக் கொள்ளுகிறது.
இது
ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்தது!
SUNLIGHT
SOAP
ஸன்லைட்
சோப்
S. 79-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED


சைபால்
RING WORM
SOUTH INDIAN
மேகப்படை, சேற்றுப்
புண், சொறி, வெளிக்கட்டி, தீப்
பட்ட புண், கரப்பான் முதலிய
வைகளுக்குக் கை கண்ட மருந்து
தயாரிப்பாளர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை


IODISAL
The best
BLOOD PURIFIER
MANUFACTURERS
SOUTH INDIAN MFG Co
MADURA
அயோடிசால்
மிகச் சிறந்த
ரத்த சுத்தி மருந்து
இது தேகத்தில் உஷ்ணம் அதி
கரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை
குணப்படுத்தி தேகத்திற்கு
ஆரோக்கியத்தை கொடுக்கும்.
ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தி
யையும் உண்டாக்கும்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை



சரும சுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!


ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்ய முடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக் கொள்ளவேண்டும்; இல்லையெனின், அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனா வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமை வாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிரிமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனாவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்யத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய்ச் சேர்த்து நன்மையைக் கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின் மீது படிந்துள்ள அழுக்கையும் வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்தி செய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்கு போஷிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனாவையே உபயோகியுங்கள்.



குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் நுரை மிருதுவாயிருப்பதால் இது குழந்தையின் மெல்லிய சருமத்திற்குச் சிறந்தது. டாக்டர்கள் அதை சிபார்சு செய்கிறார்கள். குழந்தையின் சருமத்தை எரிச்சல், அரிப்பு முதலியவைகளிலிருந்து ரெக்ஸோனாவிலுள்ள கேடில் காப்பாற்ற உதவுகிறது.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமியை யொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்யத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும் குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.



ரெக்ஸோனா ஆயிண்ட்மெண்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிலைப்புகள், கடிகள், மச்சமருக்கள் முதலிய எல்லாச் சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயிண்ட்மெண்டை உபயோகியுங்கள்.

R.P. 27-23 TM

REXONA PROPRIETARY LIMITED

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras



கல்கி
KALKI ஆகஸ்ட் 11, 1946
4 அணா

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ்:
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,70,800

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 48,90,215

ரிஸர்வ் நிதி ரூ. 50,00,000

டெபாஸிட்டுகள்:
30-6-46 முடிய
ரூ. 17 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி

இருமலா? அதை முளையிலேயே கிள்ளிப் போட்டு



கோளாறுகளைத் தவிருங்கள்!

மாறி மாறி வரும் இருமலிலிருந்து சீக்கிரம் நிவர்த்தி பெற, பெக்டுலின் காப் ஸிரப் உட்கொள்ளுங்கள். அது நோயின் மூலத்தையே தாக்குகிறது. சுவாஸக் குழாய்களை சுத்தப்படுத்துகிறது. சுவாஸாசயங்களில் கட்டிக் கிடக்கும் சளியை வெளியேற்ற உதவி புரிகிறது.

கக்குவான் இருமல், ஜலதோஷம் இன்ப்ளுயன்ஸா, மார்ச்சளி — ஆகிய நோய்களுக்கும் பயன் படத் தக்கது.

குழந்தைகளுக்கு. நீல லேபலுடைய குழந்தைகளுக்குள்ள பெக்டுலின் வாங்குங்கள்

4 அவு. & 16 அவு. பாட்டில்கள்

பெக்டுலின் காப் ஸிரப்



ஸின்டெடிக் (இந்தியா) லிட்.

12, ஸ்லேட்டர் ரோட்.
பம்பாய் 7 டெலிபோன்: நெ. 42650
லண்டன் ஆபீஸ்:
128/129, சீப்ஸைட், லண்டன் E.C. 2

சென்னை மாகாணத்துக்கு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
கே. கே. பின்னி & கம்பெனி
ராயப்பேட்டை :: சென்னை

Regd. No. M. 4392

